# போலீஸ் பார்வை

## POLICE PARVAI

மாத இதழ்

நல்ல விதைப்பு நலம் காக்கும் மாகும்

• மலர்-11 • Volume-11 • இதழ்-3 • Issue-3 • ஜனவரி-2026 • January -2026 • விலை ரூ.15/- • Rs.15/-

POLICE PARVAI NEWS WEB TV

E_Book: www.policeparvai.com




# குற்றமில்லா குமரி

பல்வேறு நடவடிக்கைகளும் திட்டங்களும் செயல்படுத்தும் SP Dr.R.ஸ்டாலின் IPS அவர்கள்



## இனி தீபமேற்றலாம்

உயர் நீதிமன்றம்



## முன்னாள் காவல் அதிகாரி இன்னாள் விவசாயி

கே.கே.முத்துசாமி





## வழக்கறிஞருக்கு பணம் செலுத்தும்போது...



இன்னும் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும், இதுதான் மருந்து, புதிய கண்டுபிடிப்பெல்லாம் கிடையாது.

www.policeparvainews.com இணைய தளத்தில் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்...



ஒரே ராசியில் இணையும் மூன்று கிரக சேர்க்கையால், திரிகிரக யோகத்தால் தை மாதம் முதல் கோடீஸ்வர யோகம் பெறும் ராசிகள்...



தித்திக்கும் செங்கரும்பு போல
எங்களுக்கு தொடர்ந்து ஆதரவளித்து வரும்
நல் உள்ளங்களின் மனதிலும்
மகிழ்ச்சி மென்மேலும் பொங்குக...
போலீஸ் பார்வை
குழுமம் சார்பாக
இனிய
பொங்கல்
நல்வாழ்த்துகள்!
ஆசிரியர் Dr.N.பாலகிருஷ்ணன்
போலீஸ் பார்வை

# போலீஸ் பார்வை

ஜனவரி 2026 மலர் 11 இதழ் 3



**அச்சிட்டு வெளியிடுபவர்** : ஆசிரியர் Dr.N.பாலகிருஷ்ணன்

**ஆன்மீக ஆலோசகர்** : Dr.M.பாலகிருஷ்ணன் சுவாமி

**கௌரவ ஆசிரியர்** : நினைவில்... புலவர் தியாக சாந்தன்

**முதன்மை ஆசிரியர்கள்** : S.முருகானந்தம், K.ராம்சுரேஷ், K.T.சிவக்குமார் B.A.,B.L., மரு.கண்ணன்

**துணை ஆசிரியர்கள்** : N.இளங்கோவன், G.ஹரிகிருஷ்ணன், N.ஜீவானந்தம், B.சம்பத், G.ஸ்ரீனிவாசன், R.வெங்கடேஷ், V.பிரபு, S.சுந்தர்

**இணை ஆசிரியர்கள்** : K.ரவிச்சந்திரன், U.மதனகோபால், K.மனோஹரன், K.K.ஞானேஸ்வரன்

International Legal advisor : **Ramachandran Saravanan B.A.,LLB., D.L.L..,LLM**

**சட்ட ஆலோசகர்கள்** : S.கோபாலமணிகண்டன் B.A., B.L., ML., மதுரை ஐகோர்ட், P.V.பிரகாஷ் B.A., B.L., V.சிவக்குமார் M.A., B.L. சென்னை ஐகோர்ட், Dr.V.S.முகம்மது சலீம் M.A., L.L.B., S.அண்ணாதுரை M.A., B.L., P.பார்த்திபன் M.Com., B.L., M.சபிதா BBA., B.L., S.ரவிச்சந்திரன் M.A., B.L, K.அருணாச்சலம் B.Com., LLB

**சிறப்பு ஆலோசகர்** : S.செயத்அலி B.Sc., LLB.,

**தலைமை நிருபர்கள்** : S.வேல்முருகன், I.சகாயராஜ், P.பிரஸ்டன், K.பாபு I.கண்ணன், N.ஹரிதாஸ், மணிகண்டன் முருகதாஸ், N.ராக்கேஷ் சுப்பிரமணியன், K.கோவர்த்தனகிரி, S.ரமேஷ், A.மாரிராஜா, P.ஜெகதீஷ், M.பாண்டியராஜன், J.ஜெயவேல்முருகன்,

**சிறப்பு நிருபர்கள்** : V.Vivek Bomb, SA.மகாதேவன், N.முரளிதரன், P.முத்துகுமரன், B.பாஸ்கரன், R.சக்திவேல், K.ரவிகிருஷ்ணன், Dr.A.S.முகமது ஹுசேன், M.சசி, P.கௌரிஷங்கர், G.அழகுராஜ், S.மணிகண்டன், J.பீமராஜ், LNK.சந்தன், B.குணசேகரன், R.பழனிச்சாமி, R.மணிமாறன், M.வெங்கடேசலு, குரு.சரவணன்

**நிருபர்கள் குழு** : G.பாபு, K.ராஜசேகர், S.ராமச்சந்திரன், B.சிவக்குமார், B.சத்தியராஜ், R.சக்திவேல், R.குப்புசாமி, N.ராமசாமி, A.பெனியல்தேவபிரபு, S.சந்திரசேகரன், M.ரகு, N.சீனிவாசன், S.சிவக்குமார், S.ஜெயச்சந்திரன், R.வசந்த், R.விஷ்ணுமோன், D.ஹரிஹரன், V.ஸ்ரீனிவாசராவ், E.பால்ராஜ், C.பாண்டியன், S.பாலமுருகன், K.இந்திரகுமார், A.ஜெயச்சந்திரன், G.சிவப்பிரகாசம், Dr.D.வெங்கடேஷ்வரா, H.நீலகண்டன், J.செல்வம், S.சிந்தாமணி விநாயகர், K.ரகு, U.தியாகராஜன், S.சரவணன், S.சிவராஜ், குஷால் K ஷர்மா, G.சதீஷ்குமார், Dr.S.ஹரிநாராயணன், K.A.சுரேஷ் கிருஷ்ணா, D.திவாகர், T.ஜெயபிரகாஷ், M.மணிவண்ணன், G.ராமமூர்த்தி, S.ஸ்ரீனிவாசன், M.சேகர், V.K.கண்ணன், P.அண்ணாமலை, N.மோஹனா, A.பாலமுருகன், V.சதிஷ், C.விஜயகுமார், D.லெட்சுமணன், R.தியாகராஜன், H.சுஜித்குமார், S.ஆனந்த், R.ராமநாதன், P.கருப்புசாமிபாண்டியன், U.செல்வகுமார், M.ஆனந்தகுமார், K.தங்கராஜ், T.ஆனந்த்குமார், M.முத்துசாமி, C.சிவகுருநாதன், AK.ஷாஜதா, R.கோவிந்தசாமி, P.அசோக்குமார், S.விக்னேஷ், S.நவீன், M.ராஜகோபால், T.ஆலன்பே, B.சையத் முகமது மீரான், P.மணிமாறன், B.ரமேஷ்குமார், P.மஹேந்தர் புரோகித், R.கண்ணன், S.மணி, K.பாண்டியன், A.தண்டபாணி, G.சஜிக்குமார், C.இளங்கோ, V.முருகேசன், S.ஹரிஹரன் (எ) அய்யப்பன், SR.சுந்தரவேலு, L.பிரகாஷ், L.கலைவாணன், V.சண்முகராஜ், M.கவுசர், S.தியாகராஜன், R.சுமதி, A.குமரன், P.சதீஷ், R.ராஜேஷ், K.மாமுண்டிராஜன், M.மாதேஸ்வரன், S.லிங்கதுரை, AR.முருகேசன், R.ஸ்ரீதர், R.ராமலெக்ஷ்மி, R.ராகவேந்திரன், G.சதீஷ்குமார், P.தணிகைவேல், P.நடராஜ், G.நந்தகுமார், S.ஆனந்த்குமார், K.சுரேஷ்குமார், B.பிரேம்குமார், J.ஆண்டன் ஆன்ரூஸ் கிஷோர், G.V.ஜெகதீசன், M.சஞ்சய், V.லெட்சுமணன், P.ஆறுமுகம், A.அலெக்ஸ், B.ஸ்ரீனிவாசன், V.கஜபதி, B.வெங்கடாசலம், P.தேவராஜ், SP.முகேஷ், ஷானவாஸ் அஹமத், A.அப்துல்காதர், முத்து ஜெயசேகர், M.முருகேசன், G.மணிகண்ட பிரபு, A.லியோ கிளமன்ட், S.அன்வர்தீன்,L.லூயில்பெர்ணான்டஸ், P.ராஜராமகிருஷ்ணன்,R.தங்கபாண்டியன், R.கோபாலகிருஷ்ணன், V.ஆறுமுகச்சாமி, M.ஆறுமுகம்,M.ரவி,S.சக்திவேல், K.கோபி, K.மாரிமுத்து, P.மணிகண்டன், S.கஜேந்திரவேல், E.கார்த்திக், SP.விமலேஸ்வரன், N.நபிமுகமது, குரு.சரவணன், V.கணேசன், R.வெங்கடேசன், V.ராதாகிருஷ்ணன், A.தாமஸ் அந்தோணி, B,மாரிமுத்து, I.வேளாங்கண்ணி, N.ராஜ், S.ஜானகி, A.மகேந்திரன், S.விக்னேஷ், K.தர்மராஜ்(எ)பாலாஜி, K.S.அசோகன், C.பரமசிவம், R.செந்தில்குமார், A.சரவணன், S.பாலாஜி, S.நவநீத கிருஷ்ணன், K.செல்வ நயினார், K.விமல்ராஜ், R.ஜோதிபாசு, K.சதீஷ்குமார், R.நந்தகுமார், J.மணிகண்டன், S.வெங்கடேஷ், V.சுகுமாரன், K.பில்லர், R.சங்கர், Dr.J.காந்தியப்பன், S.ஜெயந்தி செல்வம், V.வேல்முருகன், S.தினேஷ்குமார்



அலுவலக முகவரி: 4B, GD.Floor, 4th Block Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar, Kolathur, Chennai-600 099.
Cell: 9789491438, 7667551542 E.mail: editorpoliceparvai@gmail.com,
Website.www.policeparvai.com



All Rights Reserved Legal Jurisdiction Chennai City Court Only






# இனி தீபமேற்றலாம்

## உயர் நீதிமன்றம் உத்தரவு

மதுரை திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் மலை மேல் உள்ள தீபத்தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்ற, நீதியரசர் ஜி.ஆர்.சுவாமி நாதன் அவர்களின் தீர்ப்புக்கு எதிரான தமிழக அரசின் மேல்முறையீட்டையும், அது தொடர்பான பிற மனுக்களையும், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிபதிகள் அமர்வு, தள்ளுபடி செய்து தீர்ப்பளித்துள்ளது முருக பக்தர்களுக்கு பெருமகிழ்ச்சியளிக்கிறது.

ஆண்டில் ஒரே ஒரு நாள், கோவில் பிரதிநிதிகளும், முருக பக்தர்களும் தீபத்தூணில் தீபம் ஏற்றினால், சட்டம் ஒழுங்கு சீர்குலையும் என்ற தமிழக அரசின் வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், அப்படி ஏதேனும் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்பட்டால், அது தமிழக அரசு திட்டமிட்டு உருவாக்கினால் மட்டுமே நடக்கும் எனவும், கடுமையாக விமர்சித்துள்ளது. மேலும், திருப்பரங்குன்றம் மலையிலுள்ள தீபத் தூண், கோவிலுக்கே சொந்தமானது என்பதை சென்னை உயர்நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

சட்டம் ஒழுங்கு என்ற போர்வையில், சமூகத்தில் பிரிவினையை ஏற்படுத்தும் தமிழக அரசு மற்றும் அரசு அதிகாரிகளின் தன்னிச்சையான போக்கு, மிக ஆபத்தானது என்றும், அரசியல் லாபத்திற்காக தமிழக அரசு இத்தனை தூரம் தரம் தாழ்ந்து செல்லக் கூடாது என்றும் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை தமிழக அரசை எச்சரித்துள்ளது.

தமிழக அரசு இனியாவது தனது அதிகார துஷ்பிரயோகத்தை கோயில் வழிபாட்டு முறைகளை தடுக்க பயன்படுத்தாமல் சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளை நீதிபதிகள் திரு.ஜெயச்சந்திரன், திரு.ராமகிருஷ்ணன். அமர்வு வழங்கியுள்ள தீர்ப்பினை மதித்து, முருக பக்தர்கள் தீபத் தூணில் தீபம் ஏற்ற அனுமதி வழங்க வேண்டும் என்று முருக பக்தர்கள் வலியுறுத்துகின்றனர்.

ஆசிரியர்

**இதழ் நிர்வாகத்தின் முக்கிய அறிவுறுத்தல்...**

'போலீஸ் பார்வை' மாத இதழில் இணைந்துள்ள நிருபர்கள், மற்ற பொறுப்பு வகிப்பவர்கள் என, எவரும் எந்த உள்நோக்கத்துடனும் சுய லாபத்திற்காக தவறாக செயல்பட நிர்வாகம் அனுமதிக்காது. மேலும், மீறி செயல்படுபவர்கள் பொறுப்பிலிருந்து நீக்கப்படுவார்கள்.





# திரிகிரக யோகம்



***ஒரே ராசியில் இணையும் மூன்று கிர சேர்க்கையால், திரிகிரக யோகத்தால் தை மாதம் முதல் கோடீஸ்வர யோகம் பெறும் ராசிகள்...***

2026–ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் சனி பகவானின் சொந்த ராசியில் மூன்று கிரகங்கள் குடியேற உள்ளன. இதனால் சில ராசிக்காரர்களின் வாழ்க்கை பிரகாசிக்க உள்ளது. அது குறித்து இந்த பதிவில் பார்க்கலாம்.

ஜனவரி 13, 2026 அன்று சுக்கிர பகவான் மகர ராசிக்குள் நுழைய இருக்கிறார். அதற்கு அடுத்த நாள் ஜனவரி 14, 2026 சூரியனும், ஜனவரி 17, 2026 அன்று புதன் பகவானும் மகர ராசிக்குள் நுழைகின்றனர். இதன் காரணமாக ஏற்படும் திரிகிரக யோகத்தால் சில ராசிக்காரர்கள் நன்மைகளை அனுபவிக்க உள்ளனர். அது குறித்து இங்கு பார்க்கலாம்.

### ரிஷபம்

ரிஷப ராசியை சனி பகவானின் நண்பனான சுக்கிர பகவான் ஆட்சி செய்கிறார். சனி பகவானின் சொந்த ராசியில் உருவாகும் திரிகிரக யோகம் ரிஷப ராசிக்கும் நன்மைகளைத் தரும். இந்த காலகட்டத்தில் ரிஷப ராசிக்காரர்கள் குறிப்பிடத்தக்க நிதி ஆதாயங்களைப் பெறுவீர்கள். பல மூலங்களிலிருந்தும் உங்களுக்கு பணம் வரும். வங்கி இருப்பு வேகமாக அதிகரிக்கும். வீட்டில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். குடும்பத்தில் அடுத்தடுத்த சுப நிகழ்ச்சிகள் நடைபெறலாம். சொந்த வீடு, வாகனம், நிலம், மனை போன்ற சொத்துக்களில் முதலீடு செய்வீர்கள்.

### துலாம்

திரிகிரக யோகம் உருவாவது துலாம் ராசிக்காரர்களுக்கு நல்ல காலங்களை அளிக்கும். வாழ்க்கையில் செல்வமும், ஆடம்பரமும் அதிகரிக்கும். நீண்ட தூர பயணங்கள் அல்லது வெளிநாடு பயணங்கள் மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் உள்ளது. தொழிலில் முன்னேற்றம் சாத்தியமாகும். தொழிலதிபர்கள் எதிர்பாராத நிதி ஆதாயங்களை அனுபவிப்பீர்கள். புதிய வாகனம் அல்லது சொத்துக்களை வாங்குவீர்கள். சமூகத்தில் மதிப்பு மற்றும் மரியாதை அதிகரிக்கும். விவசாயம் செய்து வருபவர்களுக்கு இந்த காலம் நல்ல பலன்களைக் கொடுக்கும்.

### தனுசு

தனுசு ராசிக்காரர்களுக்கு திரிகிரக யோகம் மிகவும் சாதகமாக இருக்கும். நிதி ஆதாயங்களுக்கு வலுவான வாய்ப்புகள் உண்டு. திடீர் பண வரவுகள் கிடைக்கக்கூடும். வாழ்க்கையில் மகிழ்ச்சி அதிகரிக்கக்கூடும். சமூகத்தில் உங்கள் நற்பெயர் உயரும். வீட்டில் உள்ளவர்கள் உங்களை கவனித்துக் கொள்வார்கள். உங்கள் வார்த்தைகளில் செல்வாக்கு அதிகரிக்கும். தொழிலில் அபரிமிதமான வளர்ச்சி காணப்படும். அரசு வேலைக்கு முயற்சிப்பவர்களுக்கு சாதகமான காலமாக இருக்கும். புதிய வீடு வாங்குதல், பழைய வீட்டை புதுப்பித்தல் அல்லது அலங்கரித்தல் போன்ற பணிகளை செய்து முடிப்பீர்கள்.

### மகரம்

மகர ராசியின் முதல் வீடான லக்ன ஸ்தானத்தில் திரிகிரக யோகம் உருவாகிறது. எனவே மகர ராசிக்காரர்களுக்கு இது பல வழிகளில் நன்மைகளைத் தரும். திருமணமாகாதவர்களுக்கு நல்ல இடத்தில் வரன் தேடி வரும். திடீர் தொழில் முன்னேற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது. புதிய வாய்ப்புகள் உருவாகும். வீட்டில் மகிழ்ச்சி நிலவும். திருமணமானவர்களுக்கு தகராறுகள் நீங்கி அற்புதமான வாழ்க்கை அமையும். அதிர்ஷ்டம் கூடும். சமயோசிதமாக செயல்பட்டு நல்ல பலன்களைப் பெறுவீர்கள். உயர்கல்வி கற்பவர்களுக்கு சாதகமான நேரம். தந்தையின் ஆதரவு கிடைக்கும். தடைபட்டிருந்த வேலைகள் மீண்டும் ஆரம்பமாகும்.




**மேஷ ராசி அன்பர்களே!**

மாதத் தொடக்கத்தில் பிரச்சினைகளில் இருந்து விடுபட்டு சந்தோசத்தை அனுபவிப்பீர்கள். கணவன் மனைவிக்கிடையே போட்டி, பொறாமை இருக்கக் கூடாது. ஏனென்றால் அது கருத்து வேறுபாடுகளை கொண்டு வரலாம் என்பதால் பொறுமையை கடைப்பிடிக்க வேண்டும். ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலையை கொண்டு வருவதற்கு பாடுபடுவீர்கள். கோயில் திருத்தலங்களுக்கு சென்று வருவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும். சில எதிர்பாராத நன்மைகள் ஏற்படுவதால் வீட்டில் சந்தோஷம் அதிகரிக்கும். தொழில் சிறப்பாக நடக்கும். குடும்ப உறுப்பினர்கள் விருப்பப்பட்டதை நிறைவேற்றி வைப்பீர்கள். வெளிநாடு செல்வதற்கான யோகம் சிலருக்கு ஏற்படும். அலுவலகத்தில் உங்களுக்கு பொறுப்பு அதிகரிக்கும். மாத நடுப் பகுதியில் சிலருக்கு இடமாற்றம் ஏற்படக்கூடிய வாய்ப்பு உண்டு. தொழிலில் ஏற்ற இறக்கமான நிலையே காணப்படுகிறது. எதிர்ப்புகளை முறியடித்து வெற்றி பெற வேண்டும். குடும்பப் பெண்களுக்கு இது சந்தோஷத்தை தருகின்ற மாதமாக அமையும்.

வழிபடவேண்டிய தெய்வம்: முருகப்பெருமான்
ஸ்லோகம்: கந்த சஷ்டி கவசம் பாராயணம்
பரிகாரம்: முருகப்பெருமானுக்கு நெய் தீபம்
சந்த்ராஷ்டமம்: மார்கழி 29–ம் தேதி 13/01/26 செவ்வாய்க்கிழமை இரவு 7.46 மணி முதல் தை 2–ம் தேதி 16/01/26 வெள்ளிக்கிழமை காலை 7.26 மணி வரை




**ரிஷப ராசி அன்பர்களே!**

மாத ஆரம்பத்தில் பல மாற்றங்களை சந்திக்கின்ற வாய்ப்பு உங்களுக்கு ஏற்படும். எடுத்தோம் கவிழ்த்தோம் என்று எதையும் செய்ய வேண்டாம். விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. வெளியில் எவ்வளவு செல்வாக்கு இருந்தாலும் வீட்டில் மனைவி மக்களோடு சந்தோஷமாக இருப்பது தான் முக்கியம். ஆகவே எந்த சூழ்நிலையிலும் கோபப்படாமல் நடந்து கொள்ள வேண்டும். உறவினர்களால் சில பிரச்சனைகள் ஏற்படலாம். அதையும் அனுசரித்து போய் உறவுகள் கெட்டுவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டு கடன் வாங்குகின்ற நிலை வந்தாலும் அதனையும் சமாளிப்பீர்கள். நிலத்தில் முதலீடு செய்வதற்கான வாய்ப்பு உண்டாகும். பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். அலுவலகத்தில் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். கவனக்குறைவாக வேலை பார்க்க வேண்டாம். சிலருக்கு பணி மாறுதல் ஏற்படலாம். அதிகாரிகளின் ஆதரவு தங்களுக்கு சாதகமாக இருக்கும் என்று நினைத்து விடக்கூடாது. உரிய நேரத்தில் வேலைக்கு செல்வதை வழக்கமாக கொள்ள வேண்டும். பணம் கொடுக்கல் வாங்கலில் மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும். வேலைக்குச் செல்லும் பெண்கள் சிரமத்தை எதிர் நோக்கலாம். சற்று கவனமாக இருக்க வேண்டும்.

வழிபடவேண்டிய தெய்வம்: விநாயகர்
ஸ்லோகம்: விநாயகர் அகவல் பாராயணம்
பரிகாரம்: விநாயகருக்கு நெய்தீபம் ஏற்றுவது
சந்த்ராஷ்டமம்: தை 2–ம் தேதி 16/01/26 வெள்ளிக்கிழமை காலை 7.27 மணி முதல் தை 4–ம் தேதி 18/01/26 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.03 மணி வரை




**மிதுன ராசி அன்பர்களே!**

இந்த மாதத்தின் ஆரம்பம் மகிழ்ச்சியை கொண்டு வருவதாக அமையும். அதே நேரத்தில் எந்த விஷயத்திலும் கோபப்படாமல் நடந்து கொள்ள வேண்டும். கணவன் மனைவி ஒற்றுமை என்பது குடும்ப நிம்மதிக்கு ஆணிவேர். அதை மறந்து விடக்கூடாது. உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். வியாபாரம் நல்ல முறையில் நடப்பதால் தன வரவு அதிகரிக்கும். வாகனம் வாங்குகின்ற யோகம் சிலருக்கு உருவாகும். மின்சாரப் பொருட்கள் வாங்குவீர்கள். வீட்டில் மின்னணு சாதனங்களை பொருத்துவீர்கள். மனைவி மக்கள் தேவைகளை அறிந்து நிறைவேற்றி வைப்பீர்கள். அலுவலகத்தில் உங்களுக்கு பாராட்டும் சிறப்பும் கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு. அதே நேரத்தில் கொடுக்கப்பட்ட வேலையை உரிய நேரத்தில் முடிக்க வேண்டும். புதிய நகைகள் வாங்குவதற்கான யோகம் உண்டாகும். வேலைக்கு செல்லும் பெண்களுக்கு எதிர்பாராத நன்மை ஏற்படும். பதவி உயர்வு ஏற்படலாம். சம்பள அதிகரிப்பும் கிடைக்கலாம்.

வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: மாரியம்மன்
ஸ்லோகம்: துக்க நிவாரண அஷ்டகம் பாராயணம்
பரிகாரம்: மாரியம்மனுக்கு இலுப்ப எண்ணெய் தீபம்
சந்த்ராஷ்டமம்: தை 4–ம் தேதி 18/01/26 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.04 மணி முதல் தை 6–ம் தேதி 20/01/26 செவ்வாய்க்கிழமை இரவு 2.27 மணி வரை




**கடக ராசி அன்பர்களே!**

இந்த மாத ஆரம்பத்தில் பல நல்ல காரியங்கள் நடக்கும். உறவுகளில் இருந்த கருத்து வேறுபாடு விலகி சந்தோஷமான நிலை ஏற்படும். கணவன் மனைவிக்கு இடையே மகிழ்ச்சி அதிகரிக்கும். இருவரும் புரிந்து கொண்டு ஒருவருக்கொருவர் அனுசரித்து நடந்து கொள்ளுவார்கள். எதிர்கால நலனை கருத்தில் கொண்டு தங்க நகைகள் வாங்குவீர்கள். பிள்ளைகளுக்கு துணிமணி வாங்கி கொடுப்பீர்கள். உறவினர்கள் ஆதரவோடு நடந்து கொள்வார்கள். பிள்ளைகளின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு பொருளாதார நிலையை மேம்படுத்துவீர்கள். வேலை செய்யும் இடத்தில் இணக்கமான சூழ்நிலை உண்டாகும். பணிச்சுமை அதிகரித்தாலும் அதை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். வியாபாரத்திலும் தொழிலிலும் ஏற்ற இறக்கமான சூழ்நிலையை நிலவும். கூட இருந்து உங்களுக்கு இடையூறு செய்பவர்களால் பிரச்சினை உண்டாகும். இருந்தாலும் அது தொழிலையோ வியாபாரத்தையோ பாதிக்காது. எதிர்பார்த்த காரியங்கள் தாமதம் இல்லாமல் நடக்கும். பெண்களுக்கு அலுவலகத்தில் அனுசரணையான போக்கு ஏற்படும்.

வழிபடவேண்டிய தெய்வம்: அண்ணாமலையார்
ஸ்லோகம்: சிவபெருமான் அஷ்டகம் பாராயணம்
பரிகாரம்: பிரதோஷத்துக்கு பொருள்கள் வழங்குதல்
சந்த்ராஷ்டமம்: தை 6–ம் தேதி 20/01/26 செவ்வாய்க்கிழமை இரவு 2.28 மணி முதல் தை 9–ம் தேதி 23/01/26 வெள்ளிக்கிழமை காலை 8.22 மணி வரை

## சிம்ம ராசி அன்பர்களே!




குடும்பம் சம்பந்தப்பட்ட சில நல்ல முடிவுகளை மாத தொடக்கத்தி லேயே எடுப்பீர்கள். அவசரப்பட்டு பேசுகின்ற மனைவியை அனுசர ணையோடு பார்த்து பொறுப்பை உணர்த்துவீர்கள். அதனால் குடும்பத்தில் குதூகலமான நிலை உண்டாகும். குழப்பத்தை ஏற்படுத்தும் உறவினர்களை அன்போடு அரவ ணைத்து உறவை வலுப்படுத்தும் நிலை ஏற்படும். தொடக்கத்தில் சின்ன சின்ன பிரச்சனைகள் வீட்டில் ஏற்பட்டாலும் பின்னர் அவை மகிழ்ச்சியாக மாறும். இதனால் குடும்பத்தினர் மத்தியில் ஆன்மீக பலம் அதிகரிக்கும். பிள்ளைகளின் வேலை படிப்புக்காக சில முன்னேற்பாடுகள் செய்வீர்கள். வேலை செய்யும் இடத்தில் சக ஊழியர்களால் சில சிக்கல் கள் உண்டானாலும் அதிலிருந்து விடுபடுவீர்கள். போட்டிகள் அதிகமாக இருக்கும். ஆனால் அதிலி ருந்து விடுபட்டு மேன்மைகளும் உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கை தேவை. வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு பணவரவு உண்டாகி கையிருப்பு கூடும். பணி மாற்றம் ஏற்படலாம்.

வழிபடவேண்டிய தெய்வம்: லெஷ்மி நரசிம்மர்
ஸ்லோகம்: லெஷ்மி நரசிம்மர் அஷ்ட்டகம்
பரிகாரம்: யோக நரசிம்மருக்கு விளக்கேற்றுவது
சந்த்ராஷ்டமம்: தை 9–ம் தேதி 23/01/26
வெள்ளிக்கிழமை காலை 8.23 மணி முதல்
தை மாதம் 11ம் தேதி 25/01/26
ஞாயிற்றுக்கிழமை பகல் 12.16 மணி வரை

## கன்னி ராசி அன்பர்களே!




மாத முற்பகுதியில் சில சங்கடங்களை குடும்பத்தில் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படலாம். உங்கள் பக்கம் நியாயம் இருந்தாலும் வாக்குவாதத்தில் ஈடுபடக் கூடாது. கணவன் மனைவிக்கிடையே ஏற்படும் கருத்து வேறுபாடு பிள்ளைகளை பாதிக்கலாம். அதனால் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. இருப்பி னும் குடும்பத்தில் சமூகமான நிலையே காணப்படும். நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி அதிக ரிக்கும். திட்டமிட்டு காரியம் செய்தாலும் செலவுகள் கை மீறி போவதை தடுக்க முடியாது. இருந்தாலும் பெரிய பாதிப்பை கொண்டு வராது. வீட்டு தேவைகள் அதிகரிப் பதால் மின்னணு சாதனங்களை வாங்க வேண்டிய கட்டாயம் உண்டாகும். அலுவலகத்தில் வேலைப்பளு அதிகரித்தாலும் அதைப்பற்றி கவலைப்பட கூடாது. கவனமாக வேலை பார்க்க வேண்டும். சிலருக்கு பணி மாறுதல் கிடைக்கலாம். அதிகாரிகளின் கோபம் மனதை சங்கடப்படுத்தும். ஆனால் பாதிப்பு இருக்காது. மாதக் கடைசியில் அரசு ஊழியர்கள் எச்சரிக்கையாக வேலை செய்ய வேண்டும். வேலைக்குச் செல்லும் பெண்கள் விருப்பமான பொருட்களை வாங்குவார்கள்.

வழிபடவேண்டிய தெய்வம்: லெஷ்மி தாயார்
ஸ்லோகம்: லெஷ்மி அஷ்ட்டகம்
பரிகாரம்: மகாலட்சுமிக்கு பஞ்சமுக விளக்கு
சந்த்ராஷ்டமம்: தை 11–ம் தேதி 25/01/26
ஞாயிற்றுக்கிழமை பகல் 12.17 மணி முதல்
தை 13–ம் தேதி 27/01/26 செவ்வாய்க்கிழமை
பகல் 2.58 மணி வரை

## துலா ராசி அன்பர்களே!




மாதத்தின் ஆரம்பத்தில் சில தவிர்க்க முடியாத சங்கடங்கள் உண்டாகலாம். இருப்பினும் அதிலிருந்து விடுபட உறவினர்களின் ஒத்துழைப்பு கை கொடுக்கும். எதையும் யோசித்து செய்வது நல்லது. கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை மிக முக்கியம். குடும்பத்தில் குழப்பம் வருவதற்கு அதுதான் முக்கிய காரணம். பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். கையில் தாராளமாக பணம் புழங்கும். வங்கி இருப்பு அதிகரிக்கலாம். பிள்ளைகளின் கல்வித்தரம் மேம்படும் அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். வியாபாரத்தில் புதிய நுணுக்கங்களை புகுத்துவீர்கள். கூட்டு முயற்சியில் தொழிலை மேம்படுத்த முயற்சி செய்வீர்கள். போட்டியாளர்களின் கனவுகளை சிதறடிப்பீர்கள். பாதிப்புகள் எதுவும் அதிகம் இருக்காது. கணக்கு வழக்குகளை கவனமாக கையாள வேண்டும். இல்லறப் பொறுப்பில் இருக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சியும் உற்சாகமும் ஏற்படும். ஆசைப்பட்ட ஆடைகள் வாங்குவீர்கள். வேலைக்குச் செல்லும் பெண்கள் வெற்றிகரமாக பணி செய்வார்கள்.

வழிபடவேண்டிய தெய்வம்: பெருமாள், தாயார்
ஸ்லோகம்: விஷ்ணு ஸகஸ்ர நாமம்
பரிகாரம்: பெருமாளுக்கு மாவிளக்கு
சந்த்ராஷ்டமம்: தை 13–ம் தேதி 27/01/26
செவ்வாய் கிழமை பகல் 2.59 மணி முதல்
தை 15–ம் தேதி 29/01/26 வியாழக்கிழமை
மாலை 5.18 மணி வரை

## விருச்சிக ராசி அன்பர்களே!




இந்தமாதம் குடும்ப மகிழ்ச்சியின் தொடக்கமாக அமைகிறது. உறவினர்களின் வருகையால் ஏற்பட்ட கொஞ்சம் கொஞ்சமாக தீரும். மனைவி உங்களை புரிந்து கொள்வார். அதே நேரத்தில் நீங்களும் கோபத்தை வெளிப்படுத்தக் கூடாது. எதையும் நிதானமாக யோசித்து செய்ய வேண்டும். குடும்பத்தில் குறைகள் இருந்தாலும் நிறைவான மகிழ்ச்சியும் ஏற்படும். எதிர்காலத்திற்கு தேவையான சில காரியங்களை செய்வீர்கள். நண்பர்கள் வருகை சந்தோஷத்தை கொடுக்கும். அரசாங்க வேலை பார்ப்பவர்கள் அக்கறையுடன் செயல்பட வேண்டும். ஏழை எளிய மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு அர்ப் பணிப்போடு பணி செய்ய வேண்டும். எதிர்பார்த்து காத்திருந்த இடமாற்ற உத்தரவு வரலாம். சம்பள உயர்வும் கிடைக்கலாம். இருப்பினும் மாத பிற்பகுதி யில் நிதானமாகவும் எச்சரிக்கையுடன் வேலை பார்க்க வேண்டும். குடும்ப பொறுப்பை சுமக்கும் பெண்கள் குதூகலமாக இருப்பார்கள். நினைத்ததை நடத்தி வைத்து உற்சாகமடைவார்கள். இவர்களுடைய தேவை கள் படிப்படியாக பூர்த்தியாகும். வேலைக்குச் செல் லும் பெண்களுக்கும் வருமானம் அதிகரிக்கும். நன்மையும் அடைவார்கள். மன தைரியம் வரும்.

வழிபடவேண்டிய தெய்வம்: ஆண்டாள்
ஸ்லோகம்: திருப்பாவை பாராயணம்
பரிகாரம்: ஆண்டளுக்கு துளசி மாலை
சந்த்ராஷ்டமம்: தை 15–ம் தேதி 29/01/26
வியாழக்கிழமை மாலை 5.19 மணி முதல் தை 17–ம்
தேதி 31/01/26 சனிக்கிழமை இரவு 8.13 மணி வரை

### தனுசு ராசி அன்பர்களே!




மாதத் தொடக்கம் சிறப்புடன் அமைந்தாலும் சில சிக்கல்களை குடும்பத்தில் சந்திக்க நேரிடும். உறவினர்களின் பொறாமையால் குடும்பத்தில் புகைச்சல் தொடங்கும். ஆகவே கணவன் மனைவி இருவரும் நிலையை புரிந்து கொண்டு அனுசரித்து நடக்க வேண்டும். அதே நேரத்தில் உறவுகள் பாதிக்காமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். வீட்டில் மங்கல நிகழ்ச்சிகள் குறித்த பேச்சு வார்த்தைகளை நடத்துவீர் கள். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்று கின்ற நிலை உண்டாகும். நீண்ட தூர புண்ணிய ஸ்த லங்களுக்கு செல்லுகின்ற வாய்ப்பு சிலருக்கு ஏற்படக் கூடும். வேலை இடத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். கவனமாக உங்கள் வேலைகளை செய்ய வேண்டும். இடமாற்றம் சிலருக்கு மகிழ்ச்சியை தரும். அதிகாரி களின் ஒத்துழைப்பு அவ்வளவாக இருக்காது. போட்டி யாளர்களால் மறைமுக பிரச்சனைகள் ஏற்பட்டாலும் தொழிலுக்கு பெரிய பாதிப்பு எதுவும் இருக்காது. கொடுக்கல் வாங்கல் கணக்கில் தவறு இல்லாமல் பார்த்துக் கொள்ளவும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு புதிய வாய்ப்புகள் உருவாகும்.

வழிபடவேண்டிய தெய்வம்: தக்ஷிணாமூர்த்தி
ஸ்லோகம்: குரு ஸ்லோகம் பாராயணம்
பரிகாரம்: குரு – கடலை நெய்வேத்தியம்
சந்த்ராஷ்டமம்: மார்கழி 20–ம் தேதி 04/01/26 ஞாயிற்றுக்கிழமை பகல் 12.07 முதல் மார்கழி 22–ம் தேதி 06/01/26 செவ்வாய்க்கிழமை மாலை 4.40 மணி வரை

### மகர ராசி அன்பர்களே!




இந்த மாதத்தின் ஆரம்பமே உங்களுக்கு அமர்க்களமாக அமையப் போகிறது. பிரிந்து போன உறவுகளை ஒன்று சேர்க்க முயற்சிகளை முன்னெடுப்பீர்கள். அவர்கள் பற்ற வைத்த நெருப்பு குடும்பத்தில் புகைச்சலை உண்டாக்கும். அதனால் கணவன் மனைவிக்கு இடையே மனம் முரண்பாடு ஏற்படலாம். விலையேறினாலும் தங்க நகைகள் வாங்குவதில் முனைப்போடு இருப்பீர்கள். அலுவலகத்தில் வேலை சுமை அதிகரித்தாலும் பொறுப்போடு அதை நிறைவேற்றுவீர்கள். மாத நடுப்பகுதியில் அக்கறையோடு செயல்பட வேண்டும். அதிகாரிகளின் கண்டிப்பு மனதை காயப்படுத்தும். தொழில் போட்டியாளர்களின் தொல்லை பாதிப்பை கொண்டு வராது. யாருக்கும் அவசரப்பட்டு ஜாமீன் கையெழுத்து போடுவது கூடாது. குடும்பத்தை கட்டிக் காக்கும் பெண்கள் கெட்டிக்காரத்தனமாக செயல்படுவார்கள். தாங்கள் விரும்பிய காரியங்கள் நிறைவேறுவதால் மகிழ்ச்சி அடைவார்கள். வேலைக்கு போகும் பெண்களும் விரும்பியதை அடைந்து சந்தோஷத்தை வெளிப்படுத்துவார்கள்.

வழிபடவேண்டிய தெய்வம்: சனீஸ்வரர்
ஸ்லோகம்: பைரவர் ஸ்லோகம் பாராயணம்
பரிகாரம்: சனிஸ்வரருக்கு எள் தீபம் ஏற்றுவது
சந்த்ராஷ்டமம்: மார்கழி 22–ம் தேதி 06/01/26 மாலை 4.41மணி முதல் மார்கழி 24–ம் தேதி 08/01/26 காலை 7.01 மணி வரை

### கும்ப ராசி அன்பர்களே!




மாத ஆரம்பத்தில் குடும்பத்தில் சில குழப்பங்கள் நிலவினாலும் அது மாத நடுப் பகுதியில் மறைந்து போகும். உறவினர்கள் ஏற்படுத்திய சிக்கலை பேசி தீர்ப்பீர்கள். இருப்பினும் கணவன் மனைவி இருவரும் கருத்து வேறுபாடு ஏற்படாமல் நடந்து கொள்ள வேண்டும். புரிந்துணர் வோடு இருந்தால் சுற்றி இருப்பவர்களுக்கும் மகிழ்ச் சியை கொடுக்கும். புண்ணிய தளங்களுக்கு சென்று தீர்த்தமாடி இறைவழிபாடு செய்து வருகின்ற வாய்ப்பு கிடைக்கும். ஒரு சிலர் கடன் வாங்க வேண்டிய நிலை உண்டாகும். அதே நேரத்தில் தொழிலும் வியா பாரமும் கை கொடுத்து பணப்புழக்கம் அதிகரிக்கும். ஒரு சிலர் இருசக்கர வாகனம் வாங்குவார்கள். சிலர் நான்கு சக்கர வாகனத்திற்கு அதிபதி ஆவார்கள். சிலருக்கு வேறு இடத்திற்கு செல்ல வேண்டிய நிலை உருவாகும். மாத பிற்பகுதியில் சில சங்கடமான சூழ்நிலைகள் மனதிற்கு வேதனையாக இருந்தாலும் அதிலிருந்து விடுபட்டு நிற்பீர்கள். எதிர்பார்த்த நன்மை நடக்கும். வியாபாரத்தில் சிறப்பான லாபம் கிடைக்கும். போட்டியாளர்களின் இடையூறுகளை தாண்டி வருவீர்கள். பாதிப்பு இருக்காது. ஆடம்பரமாக செலவு செய்ய வேண்டாம். வேலைக்குச் செல்லும் பெண்களும் நிறைவான நன்மைகளை பெறுவார்கள்.

வழிபடவேண்டிய தெய்வம்: பைரவர்
ஸ்லோகம்: பைரவர் அஷ்டகம் பாராயணம்
பரிகாரம்: பைரவருக்கு நெய் தீபம்
சந்த்ராஷ்டமம்: மார்கழி 24–ம் தேதி 08/01/26 காலை 7.02 மணி முதல் மார்கழி 27–ம் தேதி 11/01/26 காலை 8.34 மணி வரை

### மீன ராசி அன்பர்களே !




மாதத் தொடக்கத்தில் குடும்பத்தில் சலசலப்பு ஏற்படும். அதற்கு காரணம் தாய் வழி உறவுகள். அவர்களால் ஏற்பட்ட பிரச்சனை மனவலியை கொண்டு வரும். குடும் பத்துடன் வரும் வெளிநாட்டு நண்பரால் வீட்டில் குதூகலம் அதிகரிக்கும். வியாபாரத்தில் ஏற்பட்ட லாபம் கையிருப்பாக மாறும். அதை இடம் வாங்குவதில் முதலீடு செய்ய நினைப்பீர்கள். அதற்கான ஏற்பாடுகள் விறுவிறுப்பாக நடக்கும். வீட்டிற்கு தேவையான முக்கியமான பொருட்களை வாங்கி போடுவீர்கள்.

பிள்ளைகள் ஆசைப்பட்டதை நிறைவேற்றுவதால் பெற்றோருக்கும் பிள்ளைக்கும் உள்ள அன்பு அதிகரிக்கும். வேலைக்காக வெளி நாடு செல்லும் ஏற்பாடும் நடைபெறும். அலுவ லகத்தில் அழுத்தம் அதிகரிக்கலாம். பொறுப்பு களும் கூடி வரலாம். மாத பிற்பகுதியில் சில சிக் கல்கள் உருவாகலாம். தொழில் வியாபாரத்தில் இறுக்கமான நிலை இருந்தாலும் அடுத்தடுத்த நாட்களில் அது மாறும். வேலை பார்க்கும் பெண்களுக்கு எதிர்பாராத அதிர்ஷ்டம் வந்து சேரும். பதவி உயர்வும் உண்டாகும்.

வழிபடவேண்டிய தெய்வம்: மீனாட்சி
ஸ்லோகம்: மீனாட்சி பஞ்சரத்தினம் பாராயணம்
பரிகாரம்: மீனாட்சியம்மனுக்கு நெய் தீபம்
சந்த்ராஷ்டமம்: மார்கழி 27–ம் தேதி 11/01/26 ஞாயிற்றுக்கிழமை காலை 8.35 மணி முதல் மார்கழி 29–ம் தேதி 13/01/26 செவ்வாய்க்கிழமை இரவு 7.45 மணி வரை

ஓம் காளி ஓம் நமசிவாய



கருடசித்தர்
Dr.பாலகிருஷ்ண சுவாமி
எரசை, தேனி மாவட்டம்.

# கோரக்கரின் கால ஞான ரகசியங்கள்



நம் அகண்ட பாரத தேசம் ஒரு தெய்வீக தேசமாகும். பல லட்சம் ரிஷிகளும் யோகிகளும் சித்தர்களும் தோன்றி மறைந்து உள்ளார்கள்.

இந்த அண்ட பேரண்ட பிரபஞ்சத் தத்துவத்தைச் சுருக்கி, சைவ சிவத் தத்துவமாக சித்தர்கள் மாற்றினார்கள். பல ஊழிகளாகவும் யுகங்களாகவும் பல பல உருவத்தில் இன்னும் மறைந்து இருக்கின்றார்கள். எதிர்காலத்தில் கலியுகத்தில் என்னென்ன நடக்கும் என்பதை முன்பே கணித்து ஓலைச் சுவடிகளில் எழுதி வைத்தனர். அப்படிப்பட்ட தெய்வீக ஞானச் சித்தர்களில் ஒருவராக கோரக்க சித்தர் விளங்குகின்றார்.

**கோரக்க சித்தரின் பிறப்பு**

கோரக்கச் சித்தரின் பிறப்பு ஒரு அதிசய பிறப்பாகும். ஒரு தெய்வீகப் பிறப்பாகும். கோரக்க சித்தரை உருவாக்கியதே மச்சமுனி சித்தராகும். மீன் வயிற்றில் இருந்து பிறந்த மச்ச முனியின் பிறப்பும் ஒரு அதிசயம் ஆகும். மச்ச முனியே மச்சேந்திரன் என்றும் அழைக்கப்பட்டார். மச்ச முனி சிவக்கோலம் பூண்டு வீடு வீடாகச் சென்று யாசகம் கேட்பது வழக்கம். ஒரு வீட்டின் வெளியில் நின்று அன்னம் கேட்டார். உணவு கொண்டு வந்த பெண் மனக் கவலையுடன் உணவு கொண்டு வந்து மச்ச முனிக்கு அளித்தார். அவர் அதை வாங்கவில்லை. உன் மனக்குறை என்னவென்று கேட்டார். அவள், எனக்கு திருமணம் முடிந்து பல ஆண்டுகள் ஆகியும் குழந்தை இல்லை என்று கூறினாள். அந்தப் பெண் மேல் இரக்கப்பட்டு தன் ஆசிரமம் சென்று அங்கு குழந்தையை உருவாக்கும் மனித விதைச் சாம்பலை எடுத்து வந்தார். அந்தப் பெண்ணிடம் இந்த விதைச் சாம்பலை சாப்பிடவும், உனக்கு குழந்தை தரித்து குழுந்தை பிறக்கும். 10 ஆண்டுகள் கழித்து நான் வந்து பார்க்கிறேன் என்று கூறி கிளம்பினார்.

**மாட்டுக் கொட்டகைச் சாம்பலில் பிறத்தல்**

குழந்தை இல்லாத அந்தப் பெண் அந்தச் சாம்பலை சாப்பிடும் போது, பக்கத்து வீட்டுப் பெண்கள் வந்து, அந்தச் சாம்பலைச் சாப்பிடாதே, அவன் ஒரு மந்திரவாதி, உன்னை மயக்குவதற்காகச் சாப்பிடக் கொடுத்துள்ளான் என்று குழப்பினார்கள். அந்தப் பெண்ணும் மனம் குழம்பி அந்த சாம்பல் விபூதியை வீட்டிற்குப் பின்னால் மாட்டுக் கொட்டகைக்குச் சென்று அங்கு எரிந்து கொண்டிருக்கும் அடுப்பில் போட்டு விட்டாள். பின்பு 10 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அதே வீட்டிற்கு மச்ச முனி வந்தார். அந்தப் பெண்மணியை அழைத்து நான் கொடுத்த குழந்தை எங்கே என்று கேட்டார்.

அதற்கு அந்தப்பெண் நான் சாம்பல் விபூதியை சாப்பிடும் போது பக்கத்து வீட்டுக்கார பெண்கள் என்னை குழப்பினார்கள். நான் உடனே பயந்து, மாட்டுக் கொட்டகையில் இருக்கும் அடுப்பில் போட்டுவிட்டேன். என்னை மன்னியுங்கள் என்றாள்.

**10 வயது பாலகனாக எழுந்து வருதல்**

மச்ச முனி அந்தச் சாம்பலை எனக்குக் காட்டு அம்மா என்றார். அந்தப் பெண்ணோ இந்த அடுப்புச் சாம்பலை சுத்தப்படுத்தி இந்த மாட்டுச் சாணக் குப்பையில் போட்டு விட்டோம் என்றாள். கோமாதா அடைக்கலம் கொடுத்த சாணக் குப்பையே கர்ப்பமாக தாங்கி

இருந்ததால், கோ நரனே என்று அழைத்தார். கோ சாணத்தில் இருந்தவனே, கோ இருக்கனே, கோரக்கனே எழுந்து வா என்றார். உடனே, 10 வயது பாலகனாக அவரை நோக்கி ஓடி வந்த கோரக்கனை தூக்கி அணைத்துக் கொண்டார். இந்தக் காலத்திலும் தாய் தந்தை ஒன்று சேராமல் குழாய் குழந்தையாகவும், குளோனிங்க குழந்தையைாகவும், ஆண் பெண் சேராமலேயே உருவாக்குகிறார்கள்.

இந்தக் காலத்தில் செய்யும் முறையை அந்தக் காலத்திலேயே மனித விதையை உருவாக்கி தாய் தந்தை தொடர்பில்லாமல் சித்தர்கள் மக்களுக்காக தெய்வீகக் குழந்தைகளை உருவாக்கினார்கள்.

கர்ணன் இதே சூரிய மனித விதை மூலம் குந்தி தேவியின் காதில் பிறந்ததாக வரலாறு கூறுகின்றது. இந்தக் காலத்தில் செயற்கையாக உருவாக்கும் முறைகள் அந்தக் காலத்தில் தெய்வீக வழியில் சித்தர்கள் உருவாக்கி னார்கள். கோரக்க நாதரை மச்ச முனி தோளில் தூக்கிக் கொண்டார். அந்தப் பெண் தனக்கு பிறக்க வேண்டிய குழந்தை பிறக்காமல் நம் கர்ம வினையால் குப்பையில் பிறந்ததே என்று வருந்தி மச்ச முனியிடம் மன்னிப்புக் கேட்டாள். கணவனும் மனைவியுமாக காலில் விழுந் தார்கள். அவர்கள் இருவரையும் மன்னித்து ஆசிர்வாதம் பண்ணி அங்கிருந்து தன் கோரக்க குழந்தையுடன் கிளம்பிச் சென்றார்.

### கோரக்கரை தம்பதியிடம் ஒப்படைத்தல்

பின்பு, அங்கிருந்து கிளம்பி வேறு ஊருக்கு வந்த மச்ச முனி அங்கு, அன்பாக இருக்கும் தம்பதிகளைக் கண்டார். கணவன் மனைவி இருவரும் ஜீவகாருண்யம் செய்து இல்லறம் நல்லறமாக வாழ்ந்து வந்தனர். அவர்களிடம் சென்று குழந்தையை வளர்க்கச் சொல்லி கட்டளையிட்டு குழந்தையை அவர்களிடம் கொடுத்தார். அந்த அன்பான கணவன் மனைவி இருவரும் குழந்தையைக் கண்டவுடன் மனம் மகிழ்ந்தனர். அவர்களிடம் மச்ச முனி குழந்தைக்கு கோரக்கர் என பெயர் சூட்டுங்கள் என்று கூறினார். அந்த தம்பதியினரும் கோரக்கர் என்று அன்போடு அழைத்தனர். நான் சில ஆண்டுகள் தவத்திற்குச் செல்கிறேன் என்று மச்ச முனி கூறினார். நான் தவம் முடிந்து வந்தவுடன் குழந்தையை வாங்கிக் கொள்கிறேன் என்று கூறி அவர்களிடமிருந்து விடை பெற்றார். கோரக்க நாதர் வளர்ந்த ஊர் வடக்கு பொய்கை நல்லூர். கோரக்க நாதர் இளம் வயதிலேயே தெய்வப் பற்றுடன் வளர்ந்தார். சிவ மந்திரத்தை எப்போதும் உச்சரித்துக் கொண்டு இருந்தார்.

### காகபுசுடண்டரிடம் ஆசி பெறுதல்

அந்தச் சமயத்தில் வடக்கு பொய்கை நல்லூரின் காட்டுப் பகுதியில் காகபுசுண்டர் தங்கி தவம் செய்து கொண்டிருந்தார். அதனால் வடக்கு பொய்கை நல்லூரில் உள்ள காடு காகபுசுண்டர் வனம் என்று அழைக்கப்பட்டது.

அவரை தரிசிக்க பல சித்தர்களும் சிவனடியார்களும் வந்தனர். காகபுசுண்டர் பல ஊழிக்காலங்களாக வாழ்பவர். பிரளயத்திற்கு முன்னும் பின்னும் வாழ்பவர். அவர் பெருமை கேள்விபட்ட கோரக்க நாதர் காகபுசுண்டரை தரிசனம் செய்து, அவரிடம் ஞான உபதேசம் பெற்று ஆசி வாங்கினார். பின்பு, தவம் முடிந்து மச்ச முனி கோரக்கரிடம் வந்து சேர்ந்தார்.

அன்பு தம்பதிகளிடம் விடைபெற்று அவர்களிடமிருந்து கோரக்கரை அழைத்துக் கொண்டு பல மலைகளுக்குச் சென்றார். வைத்தியம், வாதம், ஞானம் போன்ற சாஸ்திரத்தை மச்ச முனி கோரக்க நாதருக்கு போதித்தார்.

### மச்ச முனியை விட்டு கோரக்கர் பிரிதல்

மச்ச முனி கூறினார், உன் தவகாலம் தொடங்கி விட்டது. நீ பூமிக்கு எதற்கு வந்தாயோ, அதற்கான வேலை வந்து விட்டது. நீ என்னைப் பிரிந்து சென்று சிவ தியானத்தில் சில காலம் இருப்பாயாக பின்பு போகரிடம் சீடராக சேர்ந்து மீதமுள்ள ஞான ரகசியங்களைத் தெரிந்து கொள்வாயாக என்று கூறி விடை பெற்றார். கோரக்கரும் தன் தகப்பனும் குருவுமாக இருக்கும் மச்ச முனியை விட்டு பிரிய மனம் இல்லாமல் கண்ணீருடன் பிரிந்தார். பின்பு மலைகளில் தவ வாழ்க்கையை தொடங்கினார் கோரக்கர்.

### கோரக்க மூலிகை உருவான விதம்

கோரக்கர் தவ வாழ்க்கையில் இருக்கும்போது, அவரைக் காண பிரம்ம முனி அங்கு வந்தார். பின்பு கோரக்க நாதரும், பிரம்ம முனியும் உற்ற நண்பர்கள் ஆனார்கள்.

பின்பு, உலக நன்மைக்காக இருவரும் இணைந்து யாகம் செய்ய வேண்டும் என்று விரும்பினார்கள். தங்கள் தவ சக்தியால் மந்திரத்தைச் சொல்லி யாகம் செய்தார்கள். அப்பொழுது யாகத்தைத் தடுப்பதற்காக மாயை நிறைந்த தீய சக்தி இந்த யாகத்திற்குள் சென்றது. அப்பொழுது, அக்னிக்குள் இருந்து இரண்டு அழகிய பெண்கள் தோன்றினார்கள். அவர்கள் மனித குலத்தையே மயக்கி மூளையைக் கெடுக்கும் துர்சக்திகளாக தோன்றினார்கள். அவர்கள் யாகத்தில் இருந்து

வெளிவந்தால் உலகத்தையே மயக்கி மயங்கச் செய்வார்கள். இதைக் கண்ட பிரம்ம முனியும் கோரக்க நாதரும் தங்கள் கமண்டலத்தில் உள்ள நீரை கையில் அள்ளி அம்மோகப் பெண்கள் மீது தெளித்தார்கள். உடனே, அப்பெண்கள் இருவரும் யாகக் குண்டத்தில் அமுங்கி இறந்து போனார்கள். அதனால் சித்தர்கள் யாகம் தடை பெற்றது. யாகத் தீயும் தீர்த்த நீர் பட்டு அணைந்தது. நீரும், நெருப்பும் விறகு நிலமும் காற்றும் இடைவெளி ஆகாயமும் ஒன்று சேர்ந்ததால் உயிர் இயக்கமாக மாறி, இரண்டு சித்தர்கள் நீரைத் தெளித்ததால், இரண்டு செடிகளாக மறுநாள் காலை மாறி வளர்ந்தது. தீய சக்திகளிடம் தோன்றியதால் நஞ்சுக் குணமும் சித்தர்களின் தவசக்தியான நீர் தெளிக்கப்பட்டதால் அமிர்தக் குணமும் சேர்ந்து உருவானது.

அமிர்த சத்தும், ஆலகால நஞ்சுச் சத்தும் சேர்ந்து கஞ்சாவாகவும், புகையிலையாகவும் வளரந்து இருந்தது.

கோரக்க முனிவரின் சாபத்தால் கோரிக்க மூலிகை உருவானது. (கஞ்சா)

பிரம்ம முனி சாபத்தால் பிரம்மபத்திரம் என்ற புகையிலை தோன்றியது.

இந்த இரண்டு பெண்களின் சக்திகளை செடிகளாக மாற்றினார்கள்.

கஞ்சாவிலுள்ள நஞ்சை நீக்கி சுத்தி பண்ணி அதன் விஷத்தை அழித்து அதில் மீதம் இருக்கும் அமிர்தத்தை காயகற்ப மருந்தாக பயன்படுத்தினார்கள். சித்தர்கள் இதை சுத்தி பண்ணி மருத்துவ முறைகளுக்குப் பயன்படுத்தினார்கள்.

இந்தக் கோரக்கர் மூலிகையை அப்படியே பயன்படுத்தினால், மனிதனை அதன் நஞ்சு மூளையை மழுங்கச் செயது வசியம் செய்து அழிவின் பாதைக்கு கொண்டு சென்று அவனை அழித்துவிடும். நெல்லும் உணவுதான், நாம் அப்படியே சாப்பிட்டால் நெல் உமி தொண்டையில் சிக்கி சுவாசக்குழாய் அடைத்து நமக்கு ஆபத்து வந்துவிடும். ஆனால், அதை அரைத்து உமியைப் பிரித்து அரிசியாக நாம் சாப்பிடும்போது, அது நமக்கு நன்மை தரும்.

அதுபோல், கஞ்சா சாப்பிடுபவர்கள் மூளை மழுங்கி மனம் மயங்கி குடும்பம் இழந்து தவிப்பார்கள். அதனால், இன்றைய கலியுகத்தில் இது ஆபத்தான செயல். இளைஞர்கள் இந்த கஞ்சாவை சாப்பிடக் கூடாது. சித்தர்கள் சுத்தி பண்ணி அந்தக் காலத்தில் ஞானத்திற்கும், வைத்தியத்திற்கும் அந்த முறை தெரிந்து பயன்படுத்தினார்கள்.

இதனால் இதற்கு கோரக்க மூலிகை என்று பெயர் வந்தது. இந்த மூலிகை உருவான விதமாகும். சித்தர்கள் இதைச் சாப்பிடச் சொல்லி ஒருபோதும் சொன்னதில்லை.

### போகர் சீடராதல்

பின்பு கோரக்கர் போக முனிவரைச் சந்தித்து அவருடன் சீடராக சேர்ந்து பல ஆண்டுகள் வாழ்ந்தார். போக முனிவரிடம் வைத்தியம், வாதம்,, மாந்திரீகம், முப்பு பாஷாண முறைகள் போன்றவற்றைக் கற்றுக் கொடுத்தார்.

### கலியுகத்தில் நடக்கப் போவதை கூறுதல்

பின்பு போகர் கோரக்கரிடம் கூறினார், கலியுகம் முடிந்து சத்திய யுகம் பிறக்கப் போகின்றது. நான் இப்பொழுது மறைந்து மீண்டும் சத்திய யுகம் பிறக்கும் போது வருவேன். அதனால், நீ சென்று கலியுகத்தில் என்னென்ன நடக்கும் என்று நான் சொல் வதைக் கேட்டு ஒரு நூல் எழுதுவாயாக, அது கலியுகம் முடிவில் நீ சொன்னது நடக்கும். அதை நீ ஒரு தீர்க்க தரிசனமாக எழுதுவாயாக என்றுக் கட்டளையிட்டார். கலியுகத்தில் நடக்கப் போவதை கூறி மக்களை ஞான திருப்புவீராக என்று கட்டளையிட்டார்.

### கோரக்கர் சந்திர ரேகை 200

கோரக்கர் சந்திர ரேகையிலும், கலியுக சூட்சமம் என்ற நூலிலும் நடக்கப் போவதை முன்கூட்டியே அறிவித்து உள்ளார். பிரபஞ்ச ஞானத்தையும் ஆத்ம ஞானத்தையும் ஈசனிடம் கடைசியில் சென்று முக்தி அடையும் முறையும் கோரக்கர் கூறியுள்ளார்.

### கோரக்கர் எழுதிய நூல்கள்

கோரக்கர் எழுதிய நூல்கள் பல ஆயிரம் உள்ளன. நாம் சில நூல்களைப் பற்றி பார்ப்போம்.

1. கோரக்கர் சந்திர ரேகை
2. கோரக்கர் நமநாசத் திறவுகோல்
3. கோரக்கர் ரஷ மேகலை
4. கோரக்கர் முத்தாரம்
5. கோரக்கர் மலைவாசகம்
6. கோரக்கர் கற்பம்
7. கோரக்கர் முத்தி நெறி
8. கோரக்கர் அட்டகர்மம்
9. கோரக்கர் சூத்திரம்
10. கோரக்கர் வசார சூத்திரம்
11. கோரக்கர் மூலிகை
12. கோரக்கர் தாண்டவம்
13. கோரக்கர் கற்ப சூத்திரம்
14. கோரக்கர் பிரம்ம ஞானம்
15. காள மேகம்

16. கபாடப் பூட்டு
17. கமலாஞ்சனி
18. பிம்போதம்
19. திலதரவி
20. சுரபிவிந்து
21. லலாப்பூட்டு
22. பஞ்சவர்த்தம்
23. மறலி வாதம்
24. சென்மசித்து
25. ஆமை சித்து
26. வகார சித்து

என்று ஆயிரக்கணக்கான நூல்கள் உள்ளன.

கோரக்கர் எல்லா நாடுகளுக்கும் போக முனிவருடன் சென்று வந்துள்ளார். இந்தியாவின் எல்லா மலைகளுக்கும் சென்று வந்துள்ளார். அங்கு இருப்பவர்களுக்கு சிவ ஞானத்தைப் போதித்தார்.

சித்தர்கள் மனித குலத்திற்காக பூமிக்கு அவதரித்து மனிதர்களை நல்ல நெறிக்கு கொண்டு சென்று வழிநடத்துவார்கள்.

### சமாதியான இடங்கள்

தமிழ்நாட்டில் நாகப்பட்டினம் மாவட்டத்தின் வடக்கு பொய்கை நல்லூர் பொதிய மலை, ஆனை மலை, சதுரகிரி, பத்மாசூரன் மலை (கர்நாடகம்), கோரக்பூர் (வடநாடு), உத்திரப் பிரதேச மாநிலம் கோரக்பூரில் பளிங்கு கற்களால் கட்டப்பட்ட கோரக்நாத் மந்திர் என்ற சமாதி கோவில் உள்ளது. ஐப்பசி பவுணர்மியில் இவருக்கு வழிபாடு நடைபெறுகிறது.

நம் சித்தர்களும் முனிவர்களும் நம் பாரத தர்மத்தைக் காக்க நம் மண்ணில் அவதரித்து நம் தெய்வீகத்தையும், நம் கலாச்சாரத்தையும் காப்பார்கள்.

*கோரக்க சந்திர ரேகை (196–வது பாடல்)*
*ஒருமையிலா தாழிக்கரைத் கப்பாலுற்றோன்*
*ஓது மந்தப் பரட்டையன் செம் மூஞ்சி சுக்கன்*
*பெருமையுடன் எழுபத்து மூன்ற தாண்டு*
*பேதமுற ஆண்டிடவே இவன் சார் பற்றோன்*
*கருமையில்ல வெள்ளை நிற மாகத் தானே*
*கபடுடுற்று கவரந்து தொண்ணூற்றாற தாண்டு*
*வறுமை செய் தாண்ட பின்னிது குலத்தான்*
*வந்திடுவான் விசயணென்றோ ரரசன் தோற்றி*

### விளக்கம்:

கடல்களுக்கு அப்பால் இருந்து பறட்டைத் தலை உடைய சம்மூஞ்சி சுக்கன் எழுபத்து மூன்று ஆண்டுகள் நம் பாரத்தை ஆண்டதற்குப் பின்னர் இவன் குலத்தைச் சேர்ந்த வெள்ளைக்காரன் நம் பாரத நாட்டை வஞ்சக சூழ்ச்சியால் கைப்பற்றி ஆள்வான். பின்பு, பல ஆண்டுகள் வெள்ளைக்காரன் பாரத மக்களை பிரிவினை செய்து வறுமையால் வாடச் செய்வான். பல ஆண்டுகள் நம் பாரதம் தெய்வீகம் இழந்து வாடும். அதன் பின்னர் நம் பாரத தர்மத்தையும் மக்களையும் காக்க நம் பாரத மண்ணில் ஒரு அரசன் தோன்றுவான் அவன் நாம் இழந்த பாரத கலாச்சாரத்தை மீட்டுத் தருவான்.

எல்லா மக்களையும் ஒன்று சேர்ப்பான். அவன் செல்லும் இடம் எல்லாம் விசனென்று உடனே வெற்றி வாகை சூடுவான். நம் பாரத தெய்வீகத்தைக் காப்பாற்றும் அரசனாக திகழ்வான்.

### பாடல் 197 விளக்கம்:

அவன் தோன்றி ஆளும் நேரம் கலியுகம் முடிய ஆரம்பிக்கும். அவன் சத்திய யுகத்தின் ஆரம்பமாக இருப்பான். அனைத்தையும் ஒன்றிணைப்பான் உலகெங்கும் 2222–ம் ஆண்டு கலியுகம் முடிந்து சத்திய யுகம் தோன்றும். இப்பூவுலகம் மேன்மையுடன் விளங்கும். சித்தர் வழியில் அறவழியில் பல பல பாரத மகான்கள் தோன்றி அகில சககரப்பால், வேந்தராய் அழியா வரம் பெற்று மிகுந்த அன்புடன் அரசாள்வார்கள்.

இதையே, சினேந்திர மாமுனியும் வலியுறுத்துகிறார்.

### பாடல் 195 விளக்கம்:

இஸ்லாமியரும், கிறிஸ்தவர்களும், வெள்ளைக்கா ரர்களும் நம் பாரத நாட்டை ஆள்வார்கள் என்று கூறியுள்ளார்.

பாரதத்தில் அநீதி அதிகம் ஆகும்போது பாரத தர்மத்தைக் காக்க பாரத்ததைச் சித்தன் ஆள்வான். அவன் ஆளும் நேரம் சடையாண்டியும் (சிவன்), மாயண்டியும் (கண்ணன்) உலகெங்கும் வலம் வந்து தெய்வமாக விளங்குவார்கள்.

அந்தச் சித்தன் அகண்ட பாரதத்தை ஆளும் நேரம் உலகமே அன்பு வழியில் பாரத ஆன்மீகத்தில் திகழும். அதர்மம் அழிந்து தெய்வீக அகண்ட பாரதம் உருவாகும். உலகத்தின் வழிகாட்டியாக பாரதம் திகழும் என்பதை கோரக்கர் அவர் நூல்களில் கூறியுள்ளார். இனி நடக்கப் போவதைப் பற்றி அதிகம் கூறியுள்ளார். இன்னும் பல நூல்களில் இதைப் பற்றி சித்தர்கள் எதிர்காலத்தில் நடப்பதைக் கூறியுள்ளனர். 2222–ல் உலகெங்கும் முழுமையான சத்திய யுகமாக மாறும்.

◆ ◆ ◆




*தமிழ்நாடு கூடுதல் காவல்துறை இயக்குனர் (சட்டம் & ஒழுங்கு) முனைவர்.மகேஸ்வர் தயாள் IPS அவர்கள் கடலூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் காவல் அதிகாரிகளுடன் சட்டம் ஒழுங்கு தொடர்பான ஆலோசனை கூட்டம் நடத்தினார். விழுப்புரம் சரக துணைத் தலைவர் திரு.Ara.அருளரசு IPS, கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.S. ஜெயக்குமார் IPS, கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் திரு.N. கோடீஸ்வரன், திரு.V.ரகுபதி துணை காவல் கண்காணிப்பாளர்கள் இந்த ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்றனர்.*

சிறப்பு நிருபர்: **P.முத்துக்குமரன்,** கடலூர்



*திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.க.தர்ப்பகராஜ் IAS அவர்கள் திருவண்ணாமலை மாநகராட்சிக்குட்பட்ட வேங்கிக்கால், ஓம் சக்தி நகரில் பொங்கல் பரிசு தொகுப்பு பெறுவதற்கு குடும்ப அட்டைதாரர்களுக்கு வீடுகள்தோறும் டோக்கன் வழங்கும் பணியை ஆய்வு மேற்கொண்டார்.*

சிறப்பு நிருபர்: **இரா. சக்திவேல்,** வேட்டவலம்



# வழுக்கல் மற்றும் வாளையாரில் புதிய சோதனைச் சாவடிகள்

## SP Dr.K. கார்த்திகேயன் IPS அவர்கள் திறந்து வைத்தார்

கோவை மாவட்டம் கே.ஜி.சாவடி காவல் நிலைய பகுதியில் வேலந்தாவளம் மற்றும் வாளையார் சோதனை சாவடி இயங்கி வந்த நிலையில் காவலர்களுக்கு உதவியாக SP Dr.K.கார்த்திகேயன் IPS அவர்கள் வழுக்கல் மற்றும் வாளையார் பகுதிகளில் புதிய சோதனைச் சாவடியை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் பேரூர் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் திரு.சிவக்குமார் அவர்கள், கே.ஜி.சாவடி காவல் நிலைய ஆய்வாளர் திரு.சண்முகம் மற்றும் மதுக்கரை காவல் நிலைய ஆய்வாளர் திரு. கார்த்திக் தங்கம் அவர்கள் மற்றும் காவல் அதிகாரிகள் மற்றும் காவல்துறையினர் கலந்து கொண்டனர்.

மேலும், கேரள நோக்கிச் செல்லும் முக்கியச் சாலையில் அமைந்துள்ள இந்த சோதனைச்சாவடி, குற்றத் தடுப்பு மற்றும் சட்டவிரோதக் கடத்தல்களைத் தடுக்க முக்கிய பங்காற்றும் என மாவட்ட காவல் கண் காணிப்பாளர் அவர்கள் தெரிவித்தார்.

மேலும், இந்த சோதனைச்சாவடியை மேம்படுத்துவதில் முக்கிய பணியாற்றிய பேரூர் கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் கே.ஜி.சாவடி காவல் ஆய்வாளர் மற்றும் மதுக்கரை காவல் ஆய்வாளர் ஆகியோர்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் பாராட்டி, பாராட்டுகளை தெரிவித்தார்.



கோவை மாவட்ட காவல்துறை, மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் என்பதை SP Dr.K.கார்த்திகேயன் IPS அவர்கள் தெரிவித்தார்.

நிருபர்: **P.நடராஜ்,** கோவை

# குற்றமில்லா குமரி

## கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு நடவடிக்கைகளும் திட்டங்களும் செயல்படுத்தும் SP Dr.R.ஸ்டாலின் IPS அவர்கள்

கன்னியாகுமரி மாவட்டத்தை 'குற்றமில்லா குமரி"யாக மாற்ற காவல் துறையினர் பல்வேறு நடவடிக்கை களும் திட்டங்களும் செயல்படுத்தி அசத்தி வரும் SP Dr.R.ஸ்டாலின் IPS அவர்கள்.

**காய வழக்குகள்**

கடந்த 2024 ம் ஆண்டு 461 காய வழக்கு கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2025–ம் ஆண்டில் 343 காய வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது 26 சதவீதம் குறைந்துள்ளது. ரவுடிகளின் மீது தொடர்ச்சியான நடவடிக்கை மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றால் இது சாத்தியமாகியுள்ளது.

**குண்டர் தடுப்பு சட்டம்**

கடந்த 2025 ம் ஆண்டு குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் 39 பேர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இதில் தொடர் அடிதடியில் ஈடுபட்ட 15 பேரும், போதை பொருட்களை விற்பனை செய்த 07 பேரும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்ட 16 பேரும், சைபர் குற்றவாளி ஒருவரும் அடங்கும்.

**நன்னடத்தை பிணை வழக்கு**

போக்கிரிகள், கெட்ட நடத்தைக்காரர்கள், தொடர் குற்றவாளிகள் மற்றும் மோதலில் ஈடுபடுவோர் என அனைவர் மீதும் நன்னடத்தை பிணை வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 2025 ம் ஆண்டில் மட்டும் இதுவரை 868 பேர் மீது நன்னடத்தை பிணை வழக்கு பதிவு செய்யப்பட்டு அவர்களின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. இதன்மூலம் குற்றவாளிகள் திருந்தி வாழ வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**கனிமவள கனரக வாகனங்கள் மீது நடவடிக்கை**

கனிமவளத் துறையின் அனுமதியின்றி கனிம வளங்கள் கடத்தியதாக 159 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 238 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு 216 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மாவட்ட காவல்துறையின் இந்த நடவடிக்கையால் கனிமவளத் துறையின் முறையான அனுமதி சீட்டு இன்றி கனிம வளங்கள் கடத்துவது அறவே தடுக்கப்பட்டுள்ளது. மேலும் அதிக பாரம் ஏற்றி வந்த 554 வாகனங்கள் மீது மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் நடவடிக்கை





**கடந்த காலத்தை எந்த செல்வந்தனாலும் வாங்க இயலாது.**

**மணியுடன் நிமிடத்தையும் நொடியையும்**

**வாழ்வின் வெற்றிக்காக சரியாக பயன்படுத்துவோம்.**

**மகிழ்வுடன் வாழ்வை வெல்வோம்.**

**ஆசிரியர் Dr.N.பாலகிருஷ்ணன்**

எடுக்கப்பட்டது.

**செல்போன்கள் மீட்பு**

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களில் செல்போன் தொலைந்து போனதாக பல்வேறு மனுக்கள் பெறப்பட்டது. சைபர் பிரிவு போலீசார் காணாமல் போன செல்போன்களை கண்டுபிடித்து மீட்கும் பணியில் தொடர்ந்து தீவிரமாக ஈடுபட்டு வந்தனர்.

தொடர் நடவடிக்கையால் இந்த வருடத்தில் மட்டும் இரண்டு கோடியே ஐந்து லட்சம் மதிப்புள்ள 1265 செல்போன்கள் மீட்கப்பட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் உரிய நபர்களிடம் ஒப்படைத்தார்கள்.

இந்த செல்போன்கள் மாநிலத்தின் பல மாவட்டங்களில் இருந்தும் பல்வேறு வெளி மாநிலங்களில் இருந்தும் மீட்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**சாலை விபத்துக்கள்**

மாவட்ட காவல்துறையின் விபத்து தடுப்பு நடவடிக்கைகளால் 2024 ம் ஆண்டை ஒப்பிடுகையில் 2025 ம் ஆண்டு 14 சதவீதம் விபத்து உயிர் இழப்புகள் குறைந்துள்ளது.

தடுப்பு நடவடிக்கைகளாக மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுதல் உட்பட போக்குவரத்து விதிகளை மீறிய சுமார் 4,65,000 மோட்டார் வாகன வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் “Road Safety Club” மூலமாக சாலை விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

சட்டவிரோதமாக மது விற்ற வழக்குகள்

கடந்த 2025 ம் ஆண்டில் சட்டவிரோதமாக மது விற்றதாக 3193 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 3220 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு 1812.23 லிட்டர் மது பறிமுதல் செய்யப்பட்டது.

**சைபர் குற்றங்கள்**

இணையத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சமூக வலைதளம் மூலமாக பெண்களுடன் பழகி அவர்களின் போட்டோ மற்றும் வீடியோவை வெளியிடுவதாக மிரட்டுதல் மற்றும் பாலியல் ரீதியாக தொந்தரவு கொடுத்தல் தொடர்பாக 23 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 10 நபர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இதில் ஒரு நபர் மீது குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் ஆன்லைன் பண மோசடி தொடர்பாக 77 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 09 நபர்கள் கைது செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆன்லைன் பண மோசடி தொடர்பாக இதுவரை 2,89,83,656/– ரூபாய் மோசடி நபர்களின் வங்கி கணக்குகள் சைபர் கிரைம் போலீசாரால் முடக்கப்பட்டுள்ளது. அதில் 1,53,29,516/– ரூபாய் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு திரும்ப பெற்று கொடுக்கப் பட்டுள்ளது. மேலும் சமூக வலைதளங்களில் பொது அமைதியை கெடுக்கும் வகையில் அவதூறு பரப்புவோர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சைபர் குற்றங்கள் சம்மந்தமாக பள்ளிகள், கல்லூரிகளுக்கு சென்று விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தியும் மேலும் சமூக வலைதளங்கள் மற்றும் செய்தித்தாள்கள் மூலமாகவும் மாவட்ட காவல்துறை சார்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம்.

தலைமை நிருபர்: **J.ஜெயவேல் முருகன்,** கன்னியாகுமரி



தைப்பொங்கலை முன்னிட்டு, வரலாற்று சிறப்புமிக்க அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டி நடைபெறுவதை முன்னிட்டு, மேற்கொள்ளப்படவேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மதுரை மாநகர காவல் ஆணையர் முனைவர் ஜெ.லோகநாதன் IPS அவர்கள் அவனியாபுரம் பகுதியில் கள ஆய்வு மேற்கொண்டார்.

# காவல் கரங்கள் பணிகள் தொடர்ந்திட புதிய ஆம்புலன்ஸ் வாகனம்

## காவல் ஆணையர் முனைவர் J.லோகநாதன் IPS அவர்கள் தொடங்கிவைத்தார்

குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம் மடிதற்றுத் தான்முந் துறும். - என்கிற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க.

மதுரை மாநகரில் உள்ள பொது இடங்களிலும், சாலை ஓரங்களிலும் உற்றார் உறவினர்களால் கைவிடப்பட்ட நிலையில் உள்ள வயதான, ஆதரவற்ற முதியோர்களை கண்டறிந்து அவர்களுக்கு உணவு மற்றும் உடைகள் வழங்கி, இச்சமூகத்தில் தாங்களும் பாதுகாப்பான சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதை உணர்த்தும் விதமாக மதுரை மாநகர காவல் ஆணையர் முனைவர் J.லோகநாதன் IPS அவர்களால் "காவல் கரங்கள்" என்ற திட்டம் கடந்த (26.03.2025) அன்று துவக்கப்பட்டு மாநகரில் செயல்பட்டு வருகிறது.

அதன்படி மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில், இவ்வமைப்பின் சேவை பணிகள் தொய்வில்லாமல் தொடர்ந்திடும் வகையில், மதுரை மண்டல ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியின் கார்பரேட் சமூக பொறுப்பு நிதி (CSR Fund) மூலமாக ஆம்புலன்ஸ் வாகனம் ஒன்று வழங்கப்பட்டது.

அதனை மாநகர காவல் ஆணையர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். காவல் துணை ஆணையர்கள் உடனிருந்தனர்.

இந்நிகழ்ச்சியில் காவல்துறையினர், ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியின் தலைமை அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் தன்னார்வு தொண்டு அமைப்பினர், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். மேலும் காவல் கரங்கள் திட்டத்தின் மூலம் இதுவரை 131 நபர் கள் மீட்கப்பட்டு, அவர்களுக்கு பாதுகாப்பான சூழ்நிலைகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்க ஒன்று.

**மதுரை மாநகர காவல் கரங்கள் அமைப்பின் இலவச தொலைபேசி எண்:**
1800–8892–098, 6369860806 மற்றும்
**சமூக வலைதள முகவரிகளான,**
முகநூல்:Kaval Karangal (Madurai City)
இன்ஸ்டாகிராம் Kaval Karangal (@ kavalkarangal–maduraicity
எக்ஸ், X– Kaval Karangal Maduri City (@ kavalkarangalMC)

சிறப்பு நிருபர்: **J.பீமராஜ்,** மதுரை

டெல்லியில் கடந்த 11.12.2025 அன்று தொடங்கி 04.01.2026 வரை நடைபெற்ற 68th Open National Shooting Competition–2025 துப்பாக்கி சுடும் போட்டியில் திருச்சி மாவட்ட காவல்துறை சார்பில் கலந்து கொண்டு Sports 25 m பிரிவில் வெள்ளி பதக்கம் வென்ற சோமரசம்பேட்டை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திருமதி. P.சோபியா லாரன் அவர்களை திருச்சி மாவட்ட கண்காணிப்பாளர் திரு.S.செல்வநாகரத்தினம், IPS அவர்கள் பாராட்டினார்.



தலைமை நிருபர்: **N.ராக்கேஷ் சுப்ரமணியன்,** திருச்சி

# முதன்முறையாக போதை வஸ்துக்களை கண்டறிய புதிய மோப்ப நாய்

## விழுப்புரம் SP P.சரவணன் IPS அவர்கள் வாழ்த்து



விழுப்புரம் மாவட்டம் ஆயுதப்படை வளாகத்தில் இயங்கி வரும் மோப்பநாய் படை பிரிவில், குற்ற சம்பவத்தை மோப்பமிடவும் (தமிழ்), நாச வேலை செயல்களை மோப்பமிடவும் (ராணி) தனித்தனியாக மோப்ப நாய்கள் பணிபுரிந்து வரும் நிலையில் மாவட்டத்தில் முதன்முறையாக போதை வஸ்துக்களை கண்டறிய பிரத்தியேகமாக ஒரு வருட கால பயிற்சி அளிக்கப்பட்டு (அப்போதைய) SP P.சரவணன் IPS அவர்களின் உத்தரவின்படி பஸ்டர் என்ற மோப்ப நாய் போதை வஸ்துகளை கண்டறியும் பணிக்காக அமர்த்தப்பட்டுள்ளது.

நிருபர்: **R.ராமநாதன்,** விழுப்புரம்

# ஒருதடவை சொன்னா சொன்னதுதான்..

*இன்னும் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும், இதுதான் மருந்து, புதிய கண்டுபிடிப்பெல்லாம் கிடையாது. ஒருதடவை சொன்னா சொன்னதுதான், இந்த பாடலை ஒவ்வொரு வரும் எழுதி வைத்து கொள்ளுங்கள், எக்காலத்திலும் உதவும். இப்பாடல் அருந்தமிழ் மருத்துவம் 500 என்ற பாடலில் இருந்து எடுக்கப்பட்டது.*

## சித்த மருத்துவ தமிழ் மருத்துவ அறிவுரைப்பா

மூளைக்கு வல்லாரை
முடிவளர நீலிநெல்லி
ஈளைக்கு முசுமுசுக்கை
எலும்பிற்கு இளம்பிரண்டை

பல்லுக்கு வேலாலன்
பசிக்குசீ ரகமிஞ்சி
கல்லீரலுக்கு கரிசாலை
காமாலைக்கு கீழாநெல்லி

கண்ணுக்கு நந்தியாவட்டை
காதுக்கு சுக்குமருள்
தொண்டைக்கு அக்கரகாரம்
தோலுக்கு அருகுவேம்பு

நரம்பிற்கு அமுக்குரான்
நாசிக்கு நொச்சிதும்பை
உரத்திற்கு முருங்கைப்பூ
ஊதலுக்கு நீர்முள்ளி

முகத்திற்கு சந்தனநெய்
மூட்டுக்கு முடக்கறுத்தான்
அகத்திற்கு மருதம்பட்டை
அம்மைக்கு வேம்புமஞ்சள்

உடலுக்கு எள்ளெண்ணை
உணர்ச்சிக்கு நிலப்பனை
குடலுக்கு ஆமணக்கு
கொழுப்பெதிர்க்க வெண்பூண்டே

கருப்பைக்கு அசோகுபட்டை
களைப்பிற்கு சீந்திலுப்பு
குருதிக்கு அத்திப்பழம்
குரலுக்கு தேன்மிளகே!

விந்திற்கு ஓரிதழ்தாமரை
வெள்ளைக்கு கற்றாழை
சிந்தைக்கு தாமரைப்பூ
சிறுநீர்க்கல்லுக்கு சிறுகண்பீளை

கக்குவானுக்கு வசம்புத்தூள்
காய்ச்சலுக்கு நிலவேம்பு



விக்கலுக்கு மயிலிறகு
வாய்ப்புண்ணிற்கு மணத்தக்காளி

நீர்க்கோவைக்கு சுக்குமிளகுநீர்
நீரிழிவிற்கு ஆவாரைக்குடிநீர்
வேர்க்குருவிற்கு பனைநுங்குநீ
வெட்டைக்கு சிறுசெருப்படையே

தீப்புண்ணா குங்கிலியவெண்ணை
சீழ்காதுக்கு நிலவேம்பு
நாப்புண்ணிற்கு திரிபலாவேலன்
நஞ்செதிர்க்க அவரிஎட்டி

குருதிகழிச்சலுக்கு துத்திதேற்றான்
குருதிகக்கலுக்கு இம்பூரல்வேர்
பெரும்பாட்டிற்கு அத்திநாவல்
பெருவயிறுக்கு மூக்கிரட்டை

கக்கலுக்கு எலுமிச்சைஏலம்
கழிச்சலுக்கு தயிர்சுண்டை
அக்கிக்கு வெண்பூசனை
ஆண்மைக்கு பூனைக்காலி

வெண்படைக்கு பூவரசு கார்போகி
விதைநோயா கழற்சிவிதை
புண்படைக்கு புங்கன்சீமையகத்தி
புழுகுடற்கு வாய்விளங்காமணக்கு

கால்வெடிப்பா மருதாணிகிளிஞ்சல்
கரும்படை வெட்பாலைசிரட்டை
கால்சொறிக்குவெங்காரபனிநீர்
கானாகடிக்கு குப்பைமேனிஉப்பே

உடல்பெருக்க உளுந்துஎள்ளு
உளம்மயக்க கஞ்சாகள்ளு
உடல்இளைக்க தேன்கொள்ளு
உடல் மறக்க இலங்கநெய்யே

அருந்தமிழர் வாழ்வியலில்
அன்றாடம்சிறுபிணிக்கு
அருமருந்தாய் வழங்கியதை
அறிந்தவரை உரைத்தேனே!!

# விழுப்புரம் மாவட்ட 25-வது SP
# V.V.சாய்பிரனீத் IPS பொறுப்பேற்பு

விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளராக V.V.சாய் பிரனீத் IPS அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்.

2018–ம் ஆண்டு IPS பணியில் சேர்ந்த இவர் செங்கல்பட்டு மாவட்ட காவல் கண் காணிப்பாளர், மதுரை மாநகர காவல் துணை ஆணையர் மற்றும் பொருளாதார குற்றப்பிரிவு காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்துள்ளார்.

**முக்கிய கவனம் செலுத்தும் பகுதிகள்**

போதைப்பொருள் (கஞ்சா & குட்கா, குறிப்பாக பள்ளிகள்/கல்லூரிகள் அருகே போதைப் பொருள்கள் கிடைப்பதற்கு எதிரான நடவடிக்கை.

GST மற்றும் ECR போன்ற நெடுஞ்சாலைகளில் விபத்துக்களைக் குறைத்தல்.

எந்தவிதமான ரவுடித்தனங்கள் அல்லது கட்டப்பஞ்சாயத்து போன்ற செயல்களை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கப்படும்.

வரவிருக்கும் தேர்தலை முன்னிட்டு சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல்.

குற்றங்களை உடனுக்குடன் கண்டறிதல் மற்றும் வழக்குகளைச் சரியான நேரத்தில் விசாரித்தல்.

காவல் துறையினரின் நலன்.



பொதுமக்களிடம் காவல்துறையினரின் மனிதாபிமான நடத்தையை மேம்படுத்துவது மற்றும் பொதுமக்களின் குறைகளுக்குச் சரியான நேரத்தில் தீர்வு காண்பது.

நிருபர்: **R.ராமநாதன்,** விழுப்புரம்





**செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:**

**editorpoliceparvai@gmail.com**

**செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ், போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர், திருச்சி - 620 012. 9789491438**




வாராந்திர பொதுமக்கள் குறைதீர்ப்பு கூட்டம் SP திரு.செ.செல்வநாகரத்தினம் IPS அவர்களின் தலைமையில் திருச்சி மாவட்ட காவல் அலுவலகத்தில் நடைபெற்றது. பொதுமக்கள் குறைதீர்ப்பு கூட்டத்திற்கு மனு கொடுக்க வந்திருந்த பொதுமக்களிடமிருந்து மனுக்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் நேரடியாக பெற்று குறைகளை கேட்டறிந்தார். மேலும், பெறப்பட்ட மனுக்கள் மீது துரிதமாக விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

தலைமை நிருபர்: **N.ராக்கேஷ் சுப்ரமணியன்,** திருச்சி






சிவகங்கை மாவட்ட காவல்துறை சமூக நீதி மனித உரிமைகள் பிரிவு சார்பாக 'ஒன்றிணைவோம் சமத்துவம் காண்போம்' என்ற மாபெரும் விழிப்புணர்வுப் பேரணியில் சிவகங்கை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலிருந்து மாணவியர் சுமார் 700 பேர் கலந்து கொண்டனர். இப்பேரணியை சிவகங்கை SP திரு.இரா.சிவபிரசாத் IPS அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.

நிருபர்: **R.செந்தில்குமார்,** சிவகங்கை



## SP Dr.V.பிரசண்ணகுமார் IPS அவர்கள் தலைமையில்

# திருநெல்வேலி SP அலுவலகத்தில் மாதாந்திர ஆய்வு கூட்டம்

திருநெல்வேலி மாவட்ட காவல் அலுவலகத்தில் மாதாந்திர ஆய்வு கூட்டம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.V.பிரசண்ணகுமார் IPS அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்டத்தில் உள்ள அனைத்து வழக்குகளின் புலன் விசாரணை குறித்தும், நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்தும், கஞ்சா மற்றும் புகையிலை போன்ற போதைப்பொருட்கள் கடத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்வது குறித்தும், பொது அமைதிக்கு பங்கம் விளைவிப்பவர்கள் மீதும், ரவுடிகள் மீதும் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும், நீதிமன்ற அலுவல்கள் குறித்தும் மற்றும் பல்வேறு நிகழ்வுகள் குறித்தும் ஆய்வு நடைபெற்றது.

அதன் முன்னதாக திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மாவட்ட காவல்துறையின் இருசக்கர வாகனங்கள், நான்கு சக்கர வாகனங்கள், கனரக வாகனங்கள் மற்றும் காவலர்கள் அவசர காலங்களில் பணிக்கு செல்லும் இருசக்கர வாகனங்கள், உயர் அதிகாரிகள் பயன்படுத்தும் வாகனங்கள், நல்ல முறையில் பராமரிக்கப் படுகிறதா என காவல் கண்காணிப்பாளர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு வாகன ஓட்டுநர்களுக்கு முக்கிய அறிவுரைகள் வழங்கி, வாகனங்களின் நிறை குறைகளை கேட்டு தெரிந்து கொண்டார்.

பின்பு மாவட்டத்தில் கொலை, திருட்டு மற்றும் போக்சோ வழக்குகளில் உள்ள சாட்சிகளை விரைவாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி எதிரிகளுக்கு தண்டனை பெற்று கொடுத்த காவல் அதிகாரிகள், நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த எதிரிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியது மற்றும் போதைப் பொருட்கள் விற்பனையில் ஈடுபட்ட நபர்களை திறம்பட செயல்பட்டு கைது செய்தது போன்ற செயல்களில் ஈடுபட்ட காவல் ஆளிநர்கள் மற்றும் அரசு வழக்குரைஞர்கள் உட்பட மாவட்டத்தில் சிறப்பாக பணிபுரிந்த 14 பேரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் நேரில் அழைத்து நற்சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், உதவி மற்றும் துணை காவல் கண்காணிப்பாளர்கள், அரசு வழக்குரைஞர்கள், காவல் ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் மற்றும் மாவட்ட ஊர்க்காவல் படை வட்டார தளபதி அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிருபர்: R.ஜோதிபாசு, திருநெல்வேலி



# ஆங்கிலேயரை எதிர்த்து போராடி வென்ற வேலு நாச்சியார்

சிவகங்கை அரண்மனையின் ஆலோசனை கூடத்தில், கால் மேல் கால் போட்டு, கம்பீரமாய், கர்வமும், ஆணவமும் நிரம்பி வழியும், முகத்துடன் அமர்ந்திருக்கின்றான் கவர்னர் லாட்டீ காட். சிறிது நேரத்தில் சிவகங்கை மன்னர் முத்து வடுகநாதர் உள்ளே நுழைகிறார்.

நாற்காலியில் மேலும் பின்னோக்கி சாய்ந்து, இடது காலின் மேல், இருக்கும் வலது காலினை ஆட்டியபடியே, அதிகாரத் தோரணையில் பேசுகிறான் கவர்னர் லாட் டீ.

மிஸ்டர் முத்து வடுகநாதர், நீர் எமக்குக் கொடுக்க வேண்டிய வரியை, வெகு காலமாக கட்டவில்லை. ஏன்? விளக்கம் தேவை?

மன்னருக்கு ஆங்கிலம் தெரியாது, கவர்னருக்கோ தமிழ் தெரியாது. கவர்னருடன் வந்த மொழிபெயர்ப்பாளனோ, கைகட்டி, வாய் பொத்தி ஓரமாய், அமைதியாய் நிற்கிறான்.

மன்னரின் குழப்பத்தைக் கண்டும், தனது பேச்சினை புரிந்து கொள்ள முடியாத, இயலாமையைக் கண்டும், கவர்னரின் கண்களில் ஒரு ஏகத்தாளச் சிரிப்பு. ஆங்கிலம் தெரியாதா உனக்கு? என்னும் ஒரு கேலிப் பார்வை.

அறையின் வெளியில் இருந்து, இவற்றையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த வேலு நாச்சியார், அறைக்குள் புயலென புகுந்தார்.

எங்களை நத்திப் பிழைக்க வந்த நீங்கள்தான், எங்களின் தாய் மொழியைத் தெரிந்து கொள்ள வேண்டுமே தவிர, நாங்கள்



உங்கள் மொழியைத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை.

ஒரு நிமிடம்தான், ஒரே நிமிடம், வாரி சுருட்டிக் கொண்டு, தன்னையும் அறியாமல் எழுந்து நிற்கிறான் லாட் டீ.

யார் இவள்? என் மொழியில், ஆங்கிலத்தில், வீர முழக்கமிடுகிறாரே யார் இவள்? புரியவில்லை அவனுக்கு.

உனக்கு ஆங்கிலம் மட்டும்தானே தெரியும்? இதோ, இப்பொழுது நான் பேசியதை, தெலுங்கில் சொல்கிறேன் கேள்.

கவர்னர் விழித்தான்.

இதோ, மலையாளத்தில் சொல்கிறேன் கேள்.

கவர்னரின் விழிகள் வியப்பால் விரிந்தன.

இதோ கன்னடத்தில் கூறுகிறேன் கேள்.

லாட் டீ தவிக்கத் தொடங்கினான்.

இதோ உருதுவில் கூறுகிறேன் கேள்.

அறையை விட்டு வெளியே ஓடிவிடலாமா? என்ற எண்ணம் லாட் டீயின் மனதில் நுழைந்தது.

ஒரு பெண்மணிக்குள், இத்தனை மொழிகள் அடைக்கலமா?

கம்பீரமாக அமர்ந்திருந்த கவர்னர், இப்பொழுது கைகட்டி நிற்கின்றான்.

இது எங்கள் மண். எங்கள் நாடு. எங்கள் மக்கள். இங்கிருக்கும் ஒவ்வொரு துரும்பும், ஒவ்வொரு அணுவும், எங்களின் உழைப்பைச் சொல்லும்.

எங்கள் மக்களின் உழைப்பாலும், உதிரத்தாலும், வியர்வையாலும் உருவானது எங்கள் நாடு.

இங்கே ஓடுகின்ற நதிகளும், நிற்கின்ற மரங்களும், வீசுகின்ற காற்றும், அடிக்கின்ற வெயிலும், பெய்கின்ற மழையும் எங்கள் மண்ணின் பெருமையைச் சொல்லும்.

அன்புக்கு எங்கள் தலை என்றும் குனியும், ஆணவத்தோடு நெருங்கினால், தலை மண்ணில் உருளும்.

எங்கிருந்தோ பிழைக்க வந்த நீ, எங்களிடமே வரி கேட்கின்றாயா? வரி கொடுத்து எமக்குப் பழக்கமில்லை. உதவி என்று கேள், வாரி வாரி வழங்குகின்றேன். இனியொரு முறை, வரி என்று கேட்டால், வரி கேட்டு வருபவனுக்கு வாயே இருக்காது.

வேலு நாச்சியார் ஆங்கிலத்தல் முழங்கி முடித்த பின்பும், வெகுநேரம், கவர்னரின் காதுகளில், வார்த்தைகள் எதிரொலித்துக் கொண்டே இருந்தன.

இனியும் இங்கே நின்றால், உயிரும் மிஞ்சாது என்பதை அறிந்த கவர்னர், வேகமாய் அரண்மனையை விட்டு வெளியே றினான்.



## சூரிய முத்திரை



**மோதிர விரலின் நுனியை பெருவிரலின் அடியில் வைத்து மோதிர விரலின் பின்புறத்தை பெருவிரலால் மெதுவாக அழுத்தவும், மற்ற வீரர்கள் நீட்டி கொண்ட இருக்கட்டும். உடல் பருமன் குறையும். வியர்த்து கொட்டுவது குறையும். உடற் சூட்டை தேவையான அளவு கூட்டும். கொலஸ்ட்ரால் கொழுப்பு குறையும். கண் பார்வை மேம்படும். கண் புரை நோய் அகலும். இந்த முத்திரையை சம்மன் காலிட்டு இரண்டு கைகளிலும் செய்து வந்தால் நல்ல பலன் தரும்.**

**(இரண்டு கைகளிலும் செய்க...)**

# ஒரு காலத்தில் கோவை மாவட்ட காவல்துறை என்றாலே

# கே.கே.முத்துசாமி



நீதி, நேர்மை, நிர்வாகம் இவற்றில் கொங்கு வேளாளக்கவுண்டர்கள் என்று ஒரு கட்டுரை எழுத வேண்டுமெனில் கே.கே.முத்துசாமி அவர்களை பற்றி எழுதாமல் அதை நிறைவு செய்ய முடியாது.

கொங்கு வேளாளக்கவுண்டர் என்பதால் கே.கே.எம். அவர்களுக்கு பெருமையா? அல்லது கே.கே.எம். அவர்களால் கொங்கு வேளாளக்கவுண்டர் சமூகத்துக்கு பெருமையா? என்றால்..

கே.கே.எம். அவர்களால் கொங்கு வேளாளக்கவுண்டர் சமுதாயத்திற்கு பெருமை என்பதே உண்மை.

இன்றைக்கு கோவை மாநகர காவல்துறை ஒரு காவல் ஆணையர், 4 உதவி ஆணையர்கள், 19 உதவி ஆணையர்களை கொண்டு இயங்குகிறது.

ஆனால், அன்றைக்கு ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்துக்கு ஒரே ஒரு சட்ட ஒழுங்கு DSP கே.கே.எம். அவர்கள் மட்டும்தான்.

கோவையில் சாராயம், கள்ளத்தனமான மது விற்பனை, கட்டப்பஞ்சாயத்து, ரவுடியிசம், அத்தனையையும் அடியோடு ஒழித்துக்கட்டிய பெருமைக்குரியவர்.

அன்று IG யாக இருந்த திரு.வால்டர் தேவாரம் அவர்கள். வயதான கிழவன் போல் வேடமிட்டு தடியை ஊன்றிக்கொண்டு மாறுவேடத்தில் இரவு நேரத்தில் கோவையில் மதுபான கடைகள் இருந்த பல இடங்களுக்கும் சென்று ஒரு கட்டிங் இருந்தா குடுங்கப்பா, குடிக்கலைனா உயிரே போயிடும் என்று கேட்டாராம்.

அதற்கு கடைக்காரர்கள் இங்கே கே.கே.எம். எனும் DSP இருக்கிறார். அனுமதிக்கப்பட்ட நேரத்திற்கு பிறகு கடையை திறந்து ஒரு சொட்டு கொடுத்தால் கூட எங்களை தொலைத்து கட்டிவிடுவார் என்று தர மறுத்து விட்டார்களாம்.

தேவாரம், கே.கே.எம். அவர்களுக்கு போனை போட்டு நான் உங்களிடம் தோற்றுவிட்டேன் என்று சொல்லி கே.கே.எம். அவர்களை பாராட்டினாராம்.

சுப்ரீம் கோர்ட் நீதிபதி சொல்லியும் கேட்காதவர், எந்த அரசியல்வாதியின் சட்டதுக்கு புறம்பான உத்தரவுக்கும் கட்டுப்படாதவர் என கே.கே.எம். அவர்களின் நேர்மையையும் பிரமிக்க வைக்கும் செயல்பாடுகளையும், சாதனைகளையும் ஒரு கட்டுரையில் எழுதிவிட முடியாது.

ஒரு வேளை காமராஜர், கக்கன் போல நேர்மையானவர் என்பதால்தான் இயற்கையிலேயே கே.கே. என்னும் இனிஷியல் அவர் பெயரோடு ஒட்டிக்கொண்டதோ என்னவோ?



# சின்ன கதை

ரோம் நகரில் ஒரு பஞ்சாபி இருந்தார். அவருக்கு சிக்கன் இல்லாம சாப்பிட முடியாது. ஒரு முறை அந்த பஞ்சாபி வசித்த அந்த ஏரியாவில் இருக்கும் எல்லா கிறிஸ்த்துவர்களும் உபவாசம் இருந்தாங்க. ஈஸ்டர் பண்டிகைக்கு முந்தின 40 நாட்கள் என்பது தவக்காலம். அந்நாட்களில் அவர்கள் புலால் உண்ணாமல் விரதம் இருப்பர்.

ஆனால் இவர் வீட்ல இருந்து கமகமன்னு சிக்கன் குருமா வாசனை வந்தது. அக்கம் பக்கத்து வீட்டிலிருப்போருக்கு வாய் ஊற ஆரம்பித்தது. விரதம் என்பதால் சாப்பிடவும் முடியல. சிக்கன் சாப்பிடும் ஆசையும் தூண்டியது. அதனால் அக்கம்பக்கத்து வீட்டார்கள் எல்லாரும் ஒன்று கூடி அந்த பஞ்சாபி வீட்டுக்கு போய் சண்டையிட்டனர்.

நாங்க விரதத்தில் இருக்கோம்.. நீ இப்படி அசைவம் சமைச்சா, எங்களுக்கு ஆசை வராதான்னு கேட்டனர்.

இனி 40 நாட்களுக்கு வெஜ் தான் நீங்க சாப்பிடணும்னு சொல்விட்டு போய்ட்டாங்க.

இவரும் மண்டைய ஆட்டினார்.

மறுநாள் மதியம் பஞ்சாபி வீட்டில் சிக்கன் சமைக்கும் வாசனை மூக்கை துளைத்தது.

அக்கம்பக்கத்தினர் ஒரு முடிவுக்கு வந்தனர்.

எல்லோரும் பாதிரியாரிடம் முறையிட்டனர்.

பாதிரியார் அந்த பஞ்சாபியை நேரில் அழைத்து அறிவுரை கூறி, அசைவம் சமைக்க வேண்டாம் என்று சொல்லி அனுப்பினார்.

மறுநாள் மதியம் பஞ்சாபி வீட்டில் சிக்கன் வாசனை. இந்த முறை வாசனை அதிகமாக வந்தது.

எல்லோரும் பாதிரியாரிடம் ஓடினர்.

பாதிரியாருக்கு என்ன பண்ணனும்னு தெரியல. ஒரு யோசனை சொன்னார்.

அந்த பஞ்சாபியை கிறிஸ்தவராக மாற்ற ஞானஸ்னானம் பண்ணி விட்ருவோம்ன்னு முடிவு பண்ணினார். மறுநாள் அவரை அழைத்து, கிறிஸ்து பற்றி பல விஷயங்களை எடுத்து கூறி அவரை ஒரு தொட்டியில் மூன்று முறை முக்கி கிறிஸ்துவரா மாற்றினார்.

"உன் பேர் என்ன ?"

"சுக்விந்தர் சிங் "

"இன்று முதல் நீ, சாமுவேல் சாமுவேல் சாமுவேல்" ன்னு தண்ணில 3 முறை முக்கி சொன்னார்.

"இன்று முதல் 40 நாளுக்கு நீ சிக்கன் சாப்பிடக் கூடாது.. ஜீஸ்ஸ் மீது ஆணை"ன்னு சொல்ல, சாமுவேல் என்கிற சுக்விந்தரும் ஒப்புக்கொண்டார்.

எல்லோருக்கும் நிம்மதி.. பாதிரியாருக்கும் பெருமிதம். அனைவரும் மறுநாள் மதியம் பஞ்சாபி என்ன செய்கிறார் என்று பார்க்க ஆவலுடன் காத்திருந்தனர்.

மதியம் திரும்பவும் பஞ்சாபி வீட்ல இருந்து சிக்கன் வாசனை வந்தது. எல்லோரும் மீண்டும் பாதிரியாரிடம் முறையிட அவர் பஞ்சாபியை அழைத்து விசாரிக்க.

"நான் ஜீசஸ் மீது சத்தியம் பண்ணிருக்கேன், நான் இன்னிக்கி சத்தியமா சிக்கன் சாப்பிடல, உருளைக்கிழக்குதான் சமச்சேன்"னு சொல்ல கூட இருந்தவர்கள் மறுத்தனர்.

"இல்ல.. நான் பொய் சொல்லல"ன்னு சாதித்து விட்டு போய்ட்டார் பஞ்சாபி.

மறுநாளும் அதே கதை.. கூப்பிட்டு கேட்டா. நான் சமச்சது potatoன்னு சாதித்தார்.

என்னடா இது. மக்கள் குறை சொல்றாங்க, ஆனால், இவரோ ஜீசஸ் மீது சத்தியம் பண்றாரே. யாரு பொய் சொல்றாங்கன்னு தெரியலையேன்னு, பாதிரியார் மறுநாள் அந்த பஞ்சாபிக்கே தெரியாமல், அவர் கிச்சனில் என்ன நடக்குது எட்டி பார்த்தார்.

மயங்கி விழுந்து விட்டார். ஏன்னா ? அந்த பஞ்சாபி ஒரு முழு கோழியை எடுத்து அதை ஒரு பக்கெட்டில் மூன்று முறை முக்கி.. இன்னிலிருந்து நீ சிக்கன் இல்ல. உருளைக்கிழங்கு, உருளைக்கிழங்கு, உருளைக் கிழங்குன்னு சொல்லிகிட்டிருந்தார். 3 முறை முக்கினால் சுக்விந்தர் சாமுவேல் ஆகலாம், சிக்கன் உருளைக்கிழங்கு ஆகாதா என்ன ?





# இவர் பெயர் தெரியாது..!

பல ஆண்டுகள் முன் கொல்லி மலையில் வாழ்ந்த சித்தர் இவர். இப்போது சமாதியாகிவிட்டார்.

வியட்னாம் போரில் இந்திய தரப்பில் ஒரு மருத்துவராக அமெரிக்க தரப்பில் போர்முனையில் பணியாற்றி இருந்திருக்கிறார். பெயர் கே.எஸ்.ராவ். கர்நாடகாவைச் சேர்ந்தவர். ஒரு நாள் லேசாக வயிற்று வலி எடுக்கவே ஸ்கேன் செய்துள்ளார். பார்த்தால் மூன்றாம் நிலையில் புற்று நோய் கட்டிகள் பெரிதாக 3 இருந்தது. இன்னும் 15 முதல் 30 நாட்களில் மரணம் என்று தெரிந்துவிட்டது.

இறப்பது என்று தீர்மானமென்றால் என் தாய்நாட்டில் இறக்க விரும்புகிறேன் என்று கூறியுள்ளார். உடனடியாக தனி விமானம் மூலம் இந்தியாவில் வந்து இறங்கினார். அமெரிக்க படை. என்ன உதவி வேண்டுமா
னாலும் சொல்லுங்கள் என்று

கூறிவிட்டார்கள்.

வீடே இருளில் மூழ்கியது. யாரோ சொல்லப் போய் கொல்லி மலையில் வாழும் சித்தரை பார்க்கலாம், எப்படியோ இறக்கப்போகிறோம், யார் மருந்து தந்தால் என்ன, தராவிட்டால் என்ன என்று எண்ணி புறப்பட்டார். வாய் வழியாக உணவும், நீரும் இறங்கவில்லை. வெறும் ட்ரிப்ஸ் மட்டும்தான். வயிற்றில் அவ்வளவு பெரிய கட்டி இருக்கிறதே?

மலை வரை வண்டியில் போய்விட்டு பின் முடியாமல் ஏறி சித்தர் இருக்கும் இடத்துக்கு வந்துவிட்டார்கள்.

இவரை பார்த்ததுமே 'வா சிவா வா, உனக்காகத்தான் காத்துகிட்டு இருக்கேன்' என்றுள்ளார்.

இவருக்கு ஆச்சரியம். எல்லோருக்கும் இவரை 'ராவ்' என்றுதான் தெரியும். சிவா என்று சிறுவயதில் அழைத்ததோடு சரி. பின், 10 ஆண்டுகளாக கே.எஸ்.ராவ்தான்.

எதுவும் பேசவில்லை யாரும்.

ட்ரிப்ஸ் ஏற்பாட்டை பார்த்து, 'இதையெல்லாம் கழற்றிப்போடு, போய் குளிச்சுட்டு வா' என்றார்.

செய்தாயிற்று.

ஒரு டம்பளரில் பாதி நீர் எடுத்து ஏதோ ஒரு பொடியை போட்டு, ஆற்றிக்கொண்டே அதை பார்த்து ஏதோ செய்தார். குடிக்க சொன்னார். குடித்தார். பல நாட்களாக தூங்கவில்லை. அன்று இரவு சரியான தூக்கம்.

மறுநாள் காலை மீண்டும் அதே பொடி போட்ட தண்ணீர். கொஞ்ச நேரத்தில் சிறுநீர் வந்தது. போனால், கன்னங்கரேல் என்று வருகிறது. யோசித்து பாருங்கள். கருப்பாக சிறுநீர் வந்தால் எப்படி இருக்குமென்று.

'என்ன சாப்பிடறே'

'நீங்க என்ன தந்தாலும் சாப்பிடறேன் சாமி'

'கீரை கடைஞ்சு தர்றேன். சாதத்துல போட்டு சாப்பிடு'

'சரி சாமி' சாப்பிட்டாச்சு.

அடுத்து, மீண்டும் அந்த பொடி தண்ணீர். மறுபடியும், இரவு சரியான தூக்கம். மறுநாள் காலை மீண்டும் கருப்பு சிறுநீர். மலமே கழிக்கவில்லை பல நாட்களாக. அன்று போனார்.

சிறிது நேரத்தில் வயிற்றில் இருந்த வலி, பாரம், சிரமம் எதுவுமில்லாமல் நிம்மதியாக இருந்தது. ஏதோ வித்தியாசம் இருக்கிறது என்று மட்டும் தெரிந்தது. பல நாட்கள் கழித்து அன்றுதான் பசித்தது.

'இன்னிக்கு இட்லி சாப்பிடறியா'

'என்ன வேணும்னாலும் தாங்க சாமி'.

சாப்பிட்டாச்சு. 'ம்ம்ம்ம்... சரி நீ போகலாம்'.

'என்ன சாமி?'

'உனக்கு சரியா போச்சுப்பா. நீ போகலாம்.'

ஒன்றும் பேசமுடியவில்லை.

நேராக வந்தார். சோதித்து பார்த்தார். பூரண ஆரோக்கியம் என்று வந்தது. உடனடியாக அமெரிக்காவுக்கு தகவல் போனது. அடுத்த விமானம் வந்தது. அங்கு பார்த்தபோதும் இவருக்கா புற்றுநோய் என்று கூறி சிரித்தார்கள்.

விஷயமறிந்தவர்கள் அதிர்ந்தார்கள், இது எப்படி சாத்தியமென்று.

அவரிடம் என்ன மருந்து இருக்கிறதென்று கேட்டு வாங்கி வாருங்கள். மருத்துவ உலகில் புரட்சி செய்யலாம் என்றார்கள்.

வந்தார்.

கொல்லி மலை சென்றார்.

கேட்டார்.

'அந்த வெள்ளை கொரங்குக்கேல்லாம் தரமாட்டேன். அவன் காசுக்கு விப்பான்.' என்று கூறிவிட்டு 'இங்க இருந்து வேலை செய்' என்று கூறிவிட்டு போய்விட்டார்.

இவரும் பாரதத்தில் தங்கி அனைவருக்கும் இலவசமாக மருத்துவம் பார்க்க தொடங்கினார். இன்னமும் மைசூருவில் உயிரோடு இருக் கிறார்.

இவரது படத்தை நீங்களும் வைத்துக் கொள்ளுங்கள். பூஜை அறையில் இவர் படத்தை வைத்து, உங்கள் நோய்கள் பற்றி தினம் இவரோடு பேசி வாருங்கள். இவர் பார்த்துக்கொள்வார்.

இவர் பெயர் தெரியாது..!



**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**

**செய்ந்நன்றி கொன்ற மகற்கு. (110)**

விளக்கம்: எத்தனை பெரிய அறங்களை அழித்தவர்க்கும் பாவத்தைக் கழுவ வழிகள் உண்டு. ஆனால், ஒருவர் செய்த உதவியை மறந்து தீமை செய்பவனுக்கு வழியே இல்லை.



## உலகில் தன்நிகரற்ற தலைவர்

# பசும்பொன் தேவர் அவர்கள்

தன் தேசத்தின் மீது கொண்ட உண்மையான நேசம், உண்மையான பற்று, உண்மையான உணர்வு – தேவருக்கு நிகர் தேவரே.

தன் தேச விடுதலைக்காக 40,000 வீரர்களை இந்திய தேசிய இராணுவத்துக்கு திரட்டித் தந்தவர் தேவர். அதில் பெரும்பா லானவர்கள் அவரின் சொந்தங்கள் – இரத்த சொந்தங்கள். சுதந்திரப் போரில் காட்டிய ஈடுபாடு – தேவருக்கு நிகர் தேவரே.

பெரும் செல்வந்தரான தேவரவர்கள், தேச விடுதலைக்காகவும், ஏழை எளிய மக்களுக்காகவும் தன் சொந்த நிதியையும், சொத்துகளையும் வழங்கியவர்.

அரசியலில் இருக்கும் அத்தனை பெரும் ஆயிரக்கணக்கான கோடி அரசு பணத்தை கொள்ளையடிப்பவர்கள். தேசத்தை திருடுபவர்கள் தான் இப்போது இருக்கிறார்கள். தேசத்துக்காக கொடுத்தவர்களில் – தேவருக்கு நிகர் தேவரே. பதவிக்காக அலையும் பேராசை கொண்டவர்கள் இப்போது அரசியலுக்கு வருகிறார்கள்.

தனக்கு வற்புறுத்தி கொடுக்கப்பட்ட பதவியையும் ஏற்க மறுத்த பெருந்தகையாளர் – தேவருக்கு நிகர் தேவரே. அதிகாரத்தை கையில் வைத்துக்கொண்டு பெண் பித்தர்களாக மாறுகிறார்கள். பெண்ணாசையை முற்றிலும் துறந்த, சுத்த துறவியாய் வாழ்ந்த ஒழுக்க சீலர் – தேவருக்கு நிகர் தேவரே.

அடுக்கிக்கொண்டே போகலாம் – மாமனிதராய் வாழ்ந்த தெய்வம், தேவர் பெருமகனாரின் சீரிய, அரிய, பெரிய நற்பண்புகளை. ஆற்றல் மிக்கவரை, பதர்களுக்கு பிடிக்காது.

சிறந்த வீரரை , கோழைகளுக்கு பிடிக்காது.

உண்மை பேசுபவரை, பொய் பேசுபவர்களுக்கு பிடிக்காது.

நேர்மையாக இருப்பவரை, திருடனுக்கு பிடிக்காது.

ஒழுக்கமானவரை, இழிவானவர்களுக்கு பிடிக்காது.

கண்ணகியை, வேசிகளுக்கு பிடிக்காது. கண்ணகி சிலையை கண்டால் கூட கடும் கோபம் வரும்.

இப்போது இருக்கும் அரசியல்வாதிகள் தெய்வத் திருமகனார் தேவரின் புனிதத் தன்மையில் ஒரு சதவிகிதத்துக்கு கூட தகுதியற்றவர்கள். எனவே தான் அவரின் புகழை ஒடுக்க நினைக்கிறார்கள்.

தெய்வத் திருமகன் தேவர் ஐயாவை வைத்து அரசியல் லாபம் தேடுகிறார்கள்.

# நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் அவர்களை அவமதித்து புத்தகம்?



## மத்திய உள்துறைக்கு பாஜக கடிதம்; காவல் துறையிலும் புகார்

சென்னை புத்தகக் காட்சியில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர்.சுவாமி நாதனை அவமதிக்கும் வகையிலான புத்தகத்தை விற்பனை செய்ய உள்ள பதிப்பகம் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி மத்திய உள்துறை செயலருக்கு பாஜக கடிதம் அனுப்பி உள்ளது.

மேலும், திருப்பரங்குன்றம் தீபத்தூண் விவகாரத்தில் தீர்ப்பளித்த நீதிபதி ஜி.ஆர்.சுவாமி நாதனை விமர்சிக்கும் நூலை வெளியிட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு சென்னை மாநகர காவல் துறைக்கு, தமிழக பாஜக சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பாஜக மாநில செய்தி தொடர்பாளர் ஏ.என்.எஸ்.பிரசாத் அனுப்பி உள்ள கடிதத்தில், “சென்னை நந்தனத்தில் ஜனவரி 8 ஆம் தேதி முதல் 21 ஆம் தேதி வரை நடைபெறும் 49–வது சென்னை புத்தகக் காட்சியில் ‘கீழைக்காற்று’ பதிப்பகம் சார்பில் “திருப்பரங்குன்றம் விவகாரம் – ஜி.ஆர். சுவாமிநாதன்: நீதிபதியா அல்லது ஆர்.எஸ்.எஸ் ரவுடியா ?” என்ற தலைப்பிலான புத்தகம் காட்சிப்படுத்தப்பட உள்ளது.

அந்த புத்தகத்தின் அட்டைப்படத்தில், நீதிபதி ஒரு கையில் சூலத்தையும், மறு கையில் காவிக் கொடியையும் ஏந்தியிருப்பது போன்ற கேலிச் சித்திரம் இடம் பெற்றுள்ளது. இந்த பதிப்பகத்துக்கு அரங்கு எண் 172 மற்றும் 173 ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது அதிர்ச்சி அளிக்கிறது.

நீதித் துறையின் சுதந்திரத்தையும், கண்ணியத்தையும் சீர்குலைக்கும் வகையில் இந்த புத்தகம் திட்டமிட்டு வெளியிடப் பட்டுள்ளது. குறிப்பாக, திருப்பரங்குன்றம் கோயிலில் தீபம் ஏற்றுவது தொடர்பாக நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் வழங்கிய தீர்ப்பை பொறுத்துக்கொள்ள முடியாமல், தீய எண் ணத்துடன் இந்த அவதூறு பரப்பப் படுகிறது. இது நீதிமன்ற அவமதிப்பு மட்டுமல்லாமல், இந்திய நீதித்துறை மீதான பொதுமக்களின் நம்பிக்கையைச் சிதைக்கும் செயலாகும்.

எனவே, சம்பந்தப்பட்ட கீழைக் காற்று பதிப்பகம் மற்றும் தொடர்புடையவர்கள் மீது உடனடியாக வழக்குப் பதிவு செய்ய வேண்டும். அவதூறு பரப்பும் அந்த புத்தகத்தின் விற்பனை மற்றும் விநியோகத்தை உடனடியாகத் தடை செய்வதோடு, அந்த பதிப்பகத்தின் உரிமத் தையும் ரத்து செய்ய வேண்டும்.” எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் இதுகுறித்து, ஏ.என்.எஸ்பிரசாத் வெளியிட்டுள்ள அறிக்கையில், “சென்னை உயர்நீதிமன்றத்தின் கண்ணியத்தின் மீதான ஒரு வெட்கக்கேடான தாக்குதலை நான் எடுத்துக்காட்டுகிறேன். உயர் நீதிமன்ற மதுரை கிளை நீதிபதி சுவாமிநாதன் சமீபத்தில், பல நூற்றாண்டுகளாக வரலாற்று, இலக்கிய மற்றும் சட்ட ஆதாரங்களின் அடிப்படையில், திருப்பரங்குன்றம் கோவிலில் உள்ள பண்டைய தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்றும் பாரம்பரிய முறையை நிலைநிறுத்தி, நியாயமான தீர்ப்பை வழங்கினார்.

அரசியலமைப்பு கொள்கைகள் மற்றும் முன்னுதாரணங்களில் வேரூன்றிய இந்த தீர்ப்பு, வேண்டுமென்றே அவதூறு செய்யப்பட்டுள்ளது. கீழக்கட்டு பதிப்பகம், ‘திருப்பரங்குன்றம் விவகாரம் – ஜி.ஆர்.சுவாமிநாதன் நீதிபதியா அல்லது ஆர்.எஸ்.எஸ்., ரவுடியா’ என்ற தலைப்பில் நூல் வெளியிட்டுள்ளது.

அட்டைப்படம், நீதிபதியை ஒரு கை திரி சூலத்தை பிடித்து கொண்டு, மற்றொரு கை காவி கொடியை பிடித்து கொண்டு, கொடூரமாக கேலிச்சித்திரமாக்குகிறது. இந்த நூல், புத்தக கண்காட்சியில், 172 – 173 அரங்குகளில் காட்சிப்படுத்த திட்டமிடப்பட்டு உள்ளது.

நீதித்துறை நேர்மையை கேலி செய்கிறது. இது, நீதித்துறையை அவமதிக்கிறது. நீதி நிர்வாகத்தின் மீதான மக்களின் நம்பிக்கையை சிதைக்கிறது. எனவே, இந்த விவகாரத்தில் வழக்கு பதிவு செய்து, காவல்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.” எனத் தெரிவித்துள்ளார்.




# வழக்கறிஞருக்கு பணம் செலுத்தும் போது...

வழக்கறிஞருக்கு (அட்வகேட்) அவரின் சட்ட சேவைக்காக பணம் செலுத்தும் போது, அவர் அதற்கான பில் (Invoice) அல்லது ரசீதி (Receipt) வழங்க வேண்டியது கட்டாயமாகும். இது பார்லிமென்ட் சட்டங்களின்படி மற்றும் Advocates Act, 1961 மற்றும் Bar Council of India Rules ஆகியவற்றின் கீழ் உள்ள நெறிமுறைகளின்படி வரையறுக்கப்பட்டுள்ளது.

**சட்ட விதிகள் மற்றும் உரிய பிரிவுகள்**

1. Advocates Act, 1961

Sec 35 – ஒரு வழக்கறிஞர் தகுந்த நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும். பணம் பெற்றுக்கொள்வது குறித்து சட்டபூர்வமான முறைகள் இருக்க வேண்டும்.

2. Bar Council of India Rules

Part VI, Chapter II, Section IV – ஒரு வழக்கறிஞர் தனது கிளையண்டிடம் தேவையான கட்டண விவரங்களை (Fees & Expenses) வெளிப்படையாக கூற வேண்டும்.

Rule 25 – வழக்கறிஞர் தனது கிளையண்டிடமிருந்து பணம் பெற்றால், அதற்கான ரசீதி வழங்குவது கடமையாகும்.

3. Consumer Protection Act, 2019

வழக்கறிஞரின் சேவைகள் சர்வீஸ் பிரொவைடர் (Service Provider) என பொருள் கொள்ளப்படலாம். ஒரு நபர் பணம் செலுத்தும்போது பில் அல்லது ரசீதி வழங்கப்பட வேண்டும்.

**ரசீது அல்லது பில்லில் உள்ள அம்சங்கள்**

வழக்கறிஞர் வழங்கும் ரசீதி அல்லது பில் கீழ்க்கண்ட விவரங்களை கொண்டிருக்க வேண்டும்:

வழக்கறிஞரின் பெயர், பதிவு எண் (Bar Council Enrollment No.)

கிளையண்டின் (முகாமையாளர்) பெயர்

வழக்கு தொடர்பான விவரங்கள்

பெறப்பட்ட தொகை மற்றும் தேதி

வழக்கறிஞரின் கையெழுத்து அல்லது அலுவலக முத்திரை

உண்மையான நடைமுறை:

நீங்கள் ஒரு வழக்கறிஞரிடம் பணம் செலுத்தும் போது, அதற்கான சரியான ரசீதி (Bill/Invoice) பெற்றுக் கொள்ள வேண்டும். பில் வழங்க மறுத்தால், Bar Council–க்கு புகார் செய்யலாம்.

**தகவல்: குரு.சரவணன்**

Owned and Published by N.Balakrishnan from 4B, GD.Floor, 4th Block, Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar Kolathur, Chennai-600 099. and Printed him at.Meeraoffset printers
No.104, V.R.Pillai Street, Triplicane, Chennai-600 005. Editor: **N.BALAKRISHNAN**

# RAM&CO SOLICITORS LIMITED

Regulated by the Solicitor Regulation Authority SRA NO 8000919
and Registered as a Company with company House 12385372

BEC 2, GO 1, Wakering Road, London. IG 116GN ☎ **020 350 41 891**

**Admin Office (INDIA) :**
No.151/3, 9th Cross, Ponnagar,
Trichy-620001. ☎ **0431 248 2167**
✉ info@ramsolicitors.co.uk ✆ **044 7714 23 89 24**

## LEGAL SERVICES

UK Student VISA
UK Skilled Worker VISA
UK Innovator VISA



**Business formations in UK**

**Buying & Selling Property in UK**

**Ramachandran Saravanan**
B.A.,LLB., D.L.L..,LLM (London)
Solicitor of England and Wales,
Advocate (India),

Posted at - patrikachannel Egmore
**POLICE PARVAI TAMIL MONTHLY** R.Dis.No.1132/2015 RNI. **TNTAM/2015/66520**


# அரவணைக்கும் அரண்மனை அறக்கட்டளை

அறமும் அன்பும் இரு கண்கள்

**ஆதரவற்ற குழந்தைகள், முதியோர்களுக்கு முற்றிலும் இலவச சேவை**

எண்.30/2, சஹாய மாதா கோவில் தெரு, மலையடிவாரம், பொன்மலை,
திருச்சி - 620004 ✆ 98948 90808




**AEROSKATOBALL ASSOCIATION OF TAMILNADU**

Affiliated to :

**AEROSKATOBALL FEDERATION OF INDIA**

No.30/2, Shagayamatha Kovil Street,
Malaiadivaram, Ponmalai, Trichy-4

FIT INDIA

Email : aeroskatoballtrichy@gmail.com
Cell : 9943805636, 9003096846


4B, GD. Floor, 4th Block Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar,
Kolathur, Chennai - 600 099.
Cell: 97 89 49 14 38, 766 755 1542

TO